1044

# ஜகன்மோகினி.

ஆசிரியை
வை. மு. கோதைநாயகி அம்மா[ள்]



## சந்திரமண்டலம்

அல்லது

## அதிர்ஷ்ட மழை

(ஆரம்பம்)

1. எட்டாக் கனியும்—நட்டாற்றுக் கடிதமும்
2. புளியேப்ப விருந்தும்—புனிதத் தொண்டும்
3. மாவிளக்கு மகிமை—மனமுருகாப் புதுமை
4. ப்ரேமை நதியில் த்யாகக் கப்பல்

3 - DEC 1937

உங்கள் ஆசிரியையின்
மற்றொரு மகத்தான நாவல்
அநாதைப்பெண்
சிறந்த தமிழ் டாக்கீயாக
வெளிவரப்போகிறது
முழு விவரங்கள் எதிர்பாருங்கள்

JL
88211, N22JM
N37. 149
18300

சந்திரமண்டலம் அணா 2

# 14-வதாண்டு நடக்கின்றது

# ஜகன்மோகினி

ஆசிரியை : வை. மு. கோதைநாயகி அம்மாள்

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா<br>ரூ. 1-8 | நாவல்<br>மாதப் பத்திரிகை | தனிப்பிரதி<br>அணா 2 |

ஆங்கில மாதம் முதல் தேதியன்று வெளிவரும்.

ஜீவிய சந்தா ரூ. 25 அனுப்புவோருக்கு பத்திரிகையுடன், இனிமேல் நமது ஆசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| பங்கு 1<br>நளினசேகரன்<br>வீரவஸந்தா<br>3 வைரங்கள்<br>படாடோபத்தின்<br>பரிபவம்<br>பிச்சைக்காரக்<br>குடும்பம் | ஒரு வருஷ சஞ்சிகையும்<br>நாவல்களும்<br>இனாமாக வேண்டுமா ? | பங்கு 2<br>பரிமளகேசவன்<br>உத்தமசீலன்<br>கதம்பமாலை<br>சுகந்தபுஷ்பம்<br>கோபாலரத்னம்<br>புத்தியே புதையல் |
| பங்கு 3<br>கௌரீமுகுந்தன்<br>ஸாரமதி<br>சோதனையின்<br>கொடுமை | எத்தனை புதிய சந்தாதாரர்<br>களைச் சேர்த்து முன்பண<br>மனுப்புகிறீர்களோ,<br>அத்தனாவது நம்பர் பங்கி<br>லுள்ள புத்தகங்களில் | பங்கு 4<br>தியாகக்கொடி<br>நவநீதகிருஷ்ணன்<br>சாமளநாதன்<br>ருக்மிணீகாந்தன்<br>மங்களபாரதி |
| பங்கு 5<br>வைதேகி<br>பத்மசுந்தரன்<br>ராதாமணி<br>காதலின் கனி<br>சாருலோசனை | ஒன்று இனாம் | மூன்று புதிய<br>சந்தாதாரர்களைச்<br>சேர்த்து முன்<br>பணம்<br>அனுப்புவோருக்கு<br>ஒரு வருஷ<br>சஞ்சிகை இனாம் |

## "ஜகன்மோகினி" ஆபீஸ்

திருவல்லிக்கேணி.

ஸ்ரீ:

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியேன்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து

—ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் | ஈச்வர ௵ ஆவணி ௴ | இதழ் |
|---|---|---|
| 14 | September 1937 | 9 |


## திருமால் திருவந்தாதி

1\. பராவருங் குணத்துப் பரமனை முனநாட்
படுதிரைப் பரவையிற் சென்றங்
கராவனை யமல வாதியா யெங்கள்
அரும்பெரும் துயரினைக் களைவாய்
விராவரு நலத்தோ யென்ன முன்வேண்டும்
விபுதர்தந் துயரினை யொழிப்பான்
இராக வனாகி யிராவண னொழித்த
இறைவனைக் கரங்குவித் திடுவாம்.

2\. கரங்குவித் திறைஞ்சிக் காதலால் நாளும்
கருத்தினி லமலனைத் திருத்தும்
வரமிகுத் துடைய மாதவ ரடிகள்
மறக்கலா மதி யுடையேனை
உரமிகு பொருப்பி னிகர் பகடுரப்பி
ஊர்ந்திடு மொருவ னென்செய்யும்
சிரமிசைக் கரங்கள் குவித்தனன் இறைஞ்சிச்
சென்று சேர்ந்திடுவன் றன்னகரே!

—திரு. ராகவாசாரியர்.

183010.
600 008
OFFICE
3 - DEC 1937

# ஹிந்தி அவசியமா?

ஸ்ரீமான் M. C. ஸ்ரீனிவாஸன் M. A. B. L.,

சில மாதங்களுக்கு முன்பு காங்கிரஸ் மகா சபை ஏதாகிலும் பிரேரணை கொண்டு வந்தாலும் சரி, தேசியத் தலைவர்கள் ஏதாகிலும் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசினாலும் சரி, உடனே பெரிய உத்தியோகஸ்தர்களும், தனவந்தர்களும் அவைகளை பொருட்படுத்தமாட்டார்கள். ஆனால், இந்நாட்களில் காங்கிரஸ் ஆறு மாகாணங்களில் அரசாங்கத்தைக் கைப்பிடித்துக் கொண்டிருக்கிறபடியால் காங்கிரஸ் ஒவ்வொன்றையும் கவனித்தே தீர வேண்டும்.

மகாத்மா காந்திக்கு மனது பிடித்த விஷயங்கள் நான்கென்று சொல்லலாம். அவை, கதர், தீண்டாமையை யொழித்தல், சமூக ஒற்றுமை, ஹிந்தியை தேசபாஷையாக்குவதுமேயாகும். சிறிது யோசனை செய்வோமானால் நமக்கு இவ்விஷயங்களின் உண்மை நன்கு விளங்கும். நமக்குள் ஒற்றுமையுண்டாக்குவதும், தேசிய உணர்ச்சியைக் கிளப்புவதும் ஒரு பாஷையால் தான் முடியும். இனி இந்தியாவை முன்போல் பலபிளவுகளாகப் பிளந்து அரசாங்கங்கள் ஏற்படுத்த இயலாது. இந்தியாவில் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு நாலைந்து தினங்களில் சென்று விடுகிறோம். ஆகாயக் கப்பலில் இரண்டு தினங்களில் சென்று விடலாம். கூடிய சீக்கிரத்தில் ரயில், கப்பல் பிரயாணம் மாதிரி, ஆகாய விமானத்திலும் சாதாரண ஜனங்களும் செல்லலாம். அதனால் இந்தியா முழுவதும் ஒரு தேச பாஷை அவசியமென்பதை ஒருவரும் ஆக்ஷேபிக்க முடியாது. இதில் ஒரு விதமான அபிப்ராய பேதமும் ஏற்படக் காரணமில்லை.

ஆனால் எந்த பாஷை தேச பாஷையாகவேணுமென்பது தான் சர்ச்சை. இதில் பொது ஜன அபிப்பிராயத்தையெடுத்துக் கொண்டால் ஹிந்தி பாஷை பலகோடி ஜனங்களால் பேசப்படுவதாலும், மிகவும் சுலபமானதாலும், கூடினவரையில் ஹிந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் பொதுவான பதங்கள் அந்த பாஷையில் காணப்படுவதாலும், ஹிந்தி பாஷையைத் தான் இனி தேச பாஷையாகக் கொண்டாடவேண்டும். ஆங்கிலத்தை தேச பாஷையாக்க முயற்சி செய்ய முடியாது. காவேரி ஜலம் ஒரு

ஊருக்குக் கிடைக்கும்போது கங்கை ஜலத்தை குழாயின் மூலமாகக் கொண்டு வர பிரயத்னப்படுவது போலிருக்கும் ஆங்கிலத்தை தேசபாஷையாக்க முயற்சி செய்வது. முக்கியமான சமயங்களில் கங்கை நதி ஜலத்தை ஒரு சிறிய பாத்திரத்தில் வைத்துக் கொண்டு உபயோகிப்பது போல் ஆங்கிலத்தை அவசியமான சமயங்களில் தான் உபயோகப்படுத்த வேண்டும்.

இந்தியர் ஒவ்வொருவரும் ஹிந்தி கற்பது அவச்யமென்று ஏற்பட்டு விட்டால் எப்பொழுது கற்பது என்ற கேள்வி பிறக்கிறது. சென்னை அரசாங்கத்தார் கூடிய சீக்கிரம் கீழ் வகுப்புகளிலேயே (முதல் 3 பாரங்களில்) ஹிந்தியை அவசியப்படிப்பாக்கப் போவதாக திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். பலர் இந்த முறையை பயத்துடனும், சந்தேகத்துடனும் நோக்குகிறார்கள். ஆங்கில உணர்ச்சி நமக்கு எவ்வளவு தேசிய உணர்ச்சியை கிளப்பிற்றோ அதைவிட அதிக அளவு, ஹிந்தியும் உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதனால் நமது தாய்ப்பாஷை குறைந்துவிடாது. அதில் ஊக்கம் அதிகமாகுமேயொழிய தமிழ்த்தாய் எக்காரணத்தாலும் தன் பெருமையை இழக்க மாட்டாள். சிறுவர்களை ஹிந்தி படியென்று சொன்னால் கஷ்டப்படமாட்டார்கள். மிகுந்த சந்தோஷத்துடனும், ஊக்கத்துடனுமே கற்றுக்கொள்வார்கள்.

இத்துடன் ஹிந்தி பிரசார சபையார் ஒவ்வொரு டிவிஷனிலும், ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக்கூடம் நடத்த வேணும். காலை வேளைகளில் பாடங்கள் சொல்லித்தருவதைக் காட்டிலும் இரவு பள்ளிக்கூடம் மாதிரி நடத்துவது அவச்யம். அதில் ஊக்கமும் உற்சாகமும் ஏற்படுத்துவதற்கு வாரத்திற்கு இரண்டு முறை பஜனைகள் நடத்தவேண்டும். மாதத்திற்கு ஒரு முறையாவது பிரமுகர்களை வரவழைத்து உபன்யாசங்கள் ஏற்பாடு செய்யவேண்டும். தற்சமயம் பள்ளிகளில் சிறுவர்களுக்கு அன்பும், பக்தியும் ஏற்படாதது அவைகளின் பிரயோஜனமற்ற தன்மையும், மனதைக் கவரக்கூடிய விஷயங்கள் இல்லாததுமே யாகும். எந்த இயக்கமும் மனதைக் கவர்ந்தால்தான் நிரந்தரமாக இருக்கமுடியும். அம்மாதிரி ஹிந்தியை பரவச் செய்ய வேண்டியது அவச்யமானது.

# பிரதம மந்திரியின் அபிப்பிராயம்

" ஹிந்தி கற்றால் தாய்ப் பாஷை அபிவிருத்திக்கு தீங்காக இருக்கு மென்று வாதிக்கப் படுகிறது. இதைப் போல அறியாத்தனமான வாதம் இந்த விஷயமாக நான் கேட்டதே இல்லை. நாம் எண்ணவும், அதனை வெளியிடவும் ஒரு பாஷை வேண்டுமென்பதும், பொதுக் காரியமாகவும் வர்த்தக விஷயமாகவும் ஒரு பாஷையைக் கற்க வேண்டு மென்பதும் தனித் தனியான விஷயங்கள். ஞானமும்,' விஷயங்கள் தெரிந்து கொள் வதும் தாய்ப் பாஷையைத் தவிர வேறு எதன் மூலமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று நான் கூறவில்லை. ஆங்கிலம் படியுங்கள் என்றால் அது தாய் பாஷையைவிட நல்லதென்பதற்காகவல்ல. ஆனால் உலகத்தாருடன் வர்த்தகம் செய்ய அது சிறந்த பாஷையாக இருக்கிறது. அதே போல ஹிந்தி படிக்க வேண்டுமென்றால் இந்தியா முழுவதும் பேச அதுதான் சிறந்த பாஷை என்பதினால்தான். சுயநலமற்ற, புத்திசாலி களான, த்வேஷம் இல்லாத, இத்தேசத்தின் நலனை ஹ்ருதயத்தில் கொண் டுள்ள பலர் உணர்ந்தது போல ஹிந்திதான் அகில இந்திய விவகாரங்களு க்கு சௌகர்யமான பாஷையென்று நானும் உணர்ந்தேன்.

**ஹிந்தியினால் தமிழ் இரண்டாவது ஸ்தானமாக்கப்படும் எந்த திட்டத்தையும் நான் பலமாக எதிர்ப்பேன்.**

இந்தியப் பிரஜையாவதற்கு ஹிந்தி கற்க வேண்டியது மிக முக்ய மான விஷயமாக இருக்கிறது.

வருங்காலத்திலே தேச சேவை செய்ய வேண்டுமென்றால், உத்யோ கம் கிடைக்க வேண்டுமென்றால் ஹிந்தி தெரிந்துதானாக வேண்டும்.

கல்லூரியை விட்டு வெளியே வரும் ஒரு மாணவன் தன் மாகாண த்தை விட்டு இந்தியாவின் எந்த பாகத்திற்கும் செல்லமுடியாத நிலைமை யிருந்தால் சர்வ கலையையும் கற்றதாகுமோ?

முதல் மூன்று பாரங்களில் நமது சிறுவர்கள் சாதாரண ஹிந்தி கற்க முடியாதென்று கூறுவது நமது பையன்களை அவமானப்படுத்துவதாகும். சீக்கிரம் ஆரம்பிக்கவும் விரும்பவில்லை. ஏனென்றால் அப்பொழுதுதான் தாய்பாஷை உருவாகிக் கொண்டு வருகிறது. அப்புறமும் ஆரம்பிக்க விரும்பாதது அதிகப் பாடங்கள் இருப்பதால்தான்; எந்தப் பாடங்களை யும் ஹிந்திக்காக அகற்ற முடியாமல் இருக்கலாம். ஹிந்தி கற்பதற்கு வாரத்தில் மூன்று அல்லது நான்கு வகுப்புகள் கிடைப்பது சிரமமில்லை. முதல் மூன்று பாரங்களில் மாணவர்கள் ஹிந்தி தெரிந்து கொண்டு விட் டால், பிறகு இந்த பாஷை கற்றுக் கொள்வதுடன், இந்து தேச சரித்திரம் போன்ற புஸ்தகங்களும் ஹிந்தியில் நிர்ணயிக்கப்பட்டால் இந்த பாஷை மூலம் தகவலும் அறியலாம்.

வரப்போகும் காலத்தில் ஆந்திர, கர்னாடக அல்லது தமிழ் நாட்டி னருக்கு ஹிந்தி தெரியாவிட்டால் அகில இந்திய விவகாரத்தில் கலந்து கொள்ள முடியாது.

# உதிர்ந்த மணிகள்

## ஒற்றுமையின் உயர்வு

"ஜப்பானியருள் சமூக வித்தியாஸம் இருந்தபோதிலும் அந்நியருக்கு விரோதமான போராட்டத்தை ஒருங்கு நடத்துகிறார்கள்."

—புரோபசர் கின்ஜி கனேடா.

## மகாத்மாக்களின் அற்புதச்செயல்

மிகுந்த வைதீகர்கள் (நிறைந்த) அடங்கிய திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஹரிஜன ஆலயப் பிரவேசம் கிடைத்த வெற்றியானது பாபுஜி போன்ற தன்னலமற்ற உத்தமர்களால் தெய்வ காரியங்கள் சித்தி பெறுமென்பதைக் காட்டுகின்றது. —எஸ். சோமசுந்தர பாரதி.

## மனைவியின் கவலை!

நீங்கள் தான் தர்ம சத்திரம் கட்டியிருக்கிறீர்கள்; அதில் வேளை தவறாமல் எல்லோரும் சாப்பிடுகிறார்கள். சத்திரத்தை மூடினால் என் கதி என்ன?

தெய்வம் விட்ட வழி! என்னதான் பண்ணுகிறது.

—தொல்லைப்படும் கிரஹிணி.

## படிப்பின் பயன் என்ன?

நமது மாணவர்கள் பொருளாதார சாஸ்திரத்தை நன்றாக அறிந்து, பொருளாதாரப் பிரச்னைகளை நன்றாக ஆராய்ந்து அபிப்பிராயம் கொடுக்க முடியாமற் போனால் அவர்கள் பொருளாதார சாஸ்திரம் கற்றது பிரயோசனமில்லை யெனலாம். —டாக்டர் ஜே. மத்தாய்.

## பிரார்த்தனையின் புனிதத் தன்மை

சரீரத்துக்கு ஆகாரத்தைப் போல் ஆத்மாவுக்குப் பிரார்த்தனை இருக்கிறது. உண்மையில் பல நாள் ஆகாரமில்லாமலிருந்தாலும் இருக்கலாம். ஆனால் ஒரு வேளை கூடப் பிரார்த்தனை செய்யாமல் இருக்க முடியாது.

—மகாத்மா காந்தி.

## அன்பின் அவசியம்

அன்பே எதற்கும் அடிப்படை; சட்ட திட்டமில்லை. சட்ட திட்டம் அதிகரித்தால் அன்பு இருப்பதில்லை.

—டி. வி. கல்யாணசுந்தர முதலியார்

## இதைக் கவனியுங்கள்.

நீ யாரிடம் உன் ரகசியத்தைச் சொல்லுகிறாயோ நீ அவரிடம் உன் சுதந்திரத்தை இழக்கிறாய். திரு. ராகவாசாரியார்

# வெளி நாட்டுச் செய்திகள்

## ஸ்பெயின் யுத்தம்

ஜெனரல் ப்ராங்கோவின் துருப்புகள் முக்கிய நகரமான ஸாண்டன்டரை எந்த நிமிஷத்திலும் பிடித்து விடக்கூடிய நிலைமையிலிருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஸ்பானியர் ஏற்கனவே பிரான்ஸில் சேர்ந்து விட்டதால் இனிமேல் யாரையும் அநுமதிக்க முடியாதாம்.

## சீன-ஜப்பான் யுத்தம்

வெகு மும்முரமாக நடக்கிறது. முதலில் சைனர்கள் தாக்கு பிடிப்பார்களென்று தோன்றினும், இப்போது ஜப்பானியர் விஷ வாயுப் பிரயோகத்தினால் முன்னேறி வருவதாகத் தெரிகிறது.

# உள் நாட்டுச் செய்திகள்

## எல்லைப் புறம்

கான் அப்துல் கபார்கான் மீதிருந்த தடைகள் நீங்கி விட்டதால் அவர் எல்லைப் புற மாகாணத்துக்கு விஜயம் செய்தார். பிஷாவரில் நடந்த பெரிய கூட்டத்தில் பின் வருமாறு பேசினார்.

"இப்போதைய எல்லைப்புற மந்திரி சபை தன்னுடைய சக்தி எவ்வளவென்பதை உணர்ந்து கொண்டு வருகிறது. அவர்களுக்கு தேச பக்தி இருந்தால், காங்கிரஸ்காரர்களிடம் அதிகாரத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விடுவார்கள். லாபத்திற்காக நாங்கள் அதிகாரத்தை விரும்பவில்லை. வறுமை, குற்றம், சண்டை, பூசல் முதலியவைகளை விரட்டுவதற்காகவே நாங்கள் அதிகாரம் கேட்கிறோம். மந்திரிகள் பக்கிரிகளைப்போல் வாழவேண்டும்."

## அந்தமான் கைதிகள்

ஒரு மாதமாக உண்ணாவிரத மிருந்தவர்கள் நிறுத்தி விட்டதை அறிய சந்தோஷப்படுகிறோம்.

தயாராகி விட்டது!　　விரைவினில் வெளிவரும்!

நீங்கள் ஆவலுடன் எதிர் பார்த்த

மகத்தான புராணப் படம்!

K. T. ருக்மணி,　　C. S. செல்வரத்னம்

நடித்த

"பஸ்மாஸுர மோகினி"

இத்துடன்

விடா நகைப்பைத் தரும்

"இந்தியன் சார்லி" நடித்துள்ள

"மிஸ்டர் லூஸ் அண்டு

மிஸ்டர் டைட்"

என்ற காமிக் சேர்க்கப் பட்டுள்ளது.

சுந்திரம் ஸவுண்டு ஸ்டுடியோ தயாரிப்பு

கை வசமிருக்கும் படங்கள்:

கிருஷ்ண நாரதி

நளாயினி

WOLF DOG

விநியோகிப்பவர்கள்:

தி மஹாலக்ஷ்மி

ஸ்டுடியோஸ் லிமிடெட்.,

110 ஹைரோட்,

ராயப்பேட்டை, சென்னை.

வெற்றி !          வெற்றி !!          வெற்றி !!!

சுயராஜ்யம் உதயமாகப் போகிறது
உங்களுக்கும் அதில் பங்கு வேண்டாமா !
காங்கிரஸ் பொதுஜன ஸ்தாபனம்
கிராமமே இந்தியாவுக்கு உயிர்
முதுகெலும்பில்லாது சுகவாழ்வு அடையமுடியுமா ?
அப்படியானால்
நீங்கள் செய்யவேண்டியதென்ன ?
உடனே

**மந்தாகினி**

**அல்லது**

**கிராமத்தொண்டு**

என்னும் அருமையான சமூக நாவலை வாங்கி வாசியுங்கள்.
பிரகாசைப்போல் நீங்களும் பொதுஜனத் தலைவராவீர்கள்.

விலை எட்டு அணா          தபாற் செலவு வேறு

[ஜகன்மோகினி சந்தாதாரர்களுக்கு தபால் செலவு இனாம்]

**வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி**

---

புத்தக விமர்சனம்

## தமிழ் டாக்கி பிரமுகர்கள்

[விலை ரூ. 3/-உள்நாட்டு தபாற்செலவு அணா 8. ரூ.3/8 முன்பணமாகவே அனுப்பவேண்டும். ஸ்ரீமான் P. S. வாஸன், 333, தம்புச்செட்டி தெரு ஜி. டி. சென்னை]

நடிகர்கள், டைரக்டர்கள், பாடல் இயற்றியவர்கள் முதலிய பிரமுகர்களின் வாழ்க்கைக் குறிப்புகளும், புகைப்படங்களும் அடங்கிய இப் புத்தகம் வரப்பெற்றோம். சென்னை பிலிம் தொழிலின் வரலாறு படிப்பதற்கு மிகவும் ஸ்வாரஸ்யமாயிருக்கிறது. டாக்கீஸில் சம்பந்தப்பட்டவர்கள் ஒருவரை யொருவர் அறிந்துகொள்ளவும், அவர்களைப் பற்றிப் பொது ஜனங்கள் தெரிந்துகொள்ளவும், மிகவும் உபயோகமானது. ஸ்ரீமான் வாஸன் எழுதியபடி, முதலாளிகள், நடிகர்கள், முதலியோருடைய பூர்ண ஒத்துழைப்பில்லாததால் இதில் இன்னும் அவசியமான விஷயங்கள் சேர்க்கப்படவில்லை. அடுத்த பதிப்பிற்குள் முழு விவரங்களையும் சேர்த்து வெளியிட மேற்படியார்கள் உதவி புரிவார்களென்று நம்புகிறோம். மேலும், தமிழில் வெளிவந்துள்ள படங்களின் முக்கிய நடிகர்கள், டைரெக்டர்கள், முதலாளிகள், ஆசிரியர் முதலியோரைப்பற்றி ஒரே சமயத்தில் தெரிந்துகொள்ளும்படியான குறிப்புகளையும் (list) சேர்த்தால் எல்லோருக்கும் உதவியாயிருக்கும். முக்கியமாக அவரவர்களுடைய விலாசமும் கதையாசிரியர்களின் பெயருமில்லாதது குறிப்பிடத்தக்கது.

[ரா...ணி]

ஸ்ரீ

# சந்திரமண்டலம்

அல்லது

# அதிர்ஷ்ட மழை

## முதலாவது அதிகாரம்

### எட்டாக் கனியும் நட்டாற்றுக் கடிதமும்

"உலகநாதா! இன்று என்ன ஆநந்த மயமாயிருக்கிறது பார்த்தாயா! நேற்று முதல் ஓயாது ஒழியாது எங்கு பார்த்தாலும் மங்களகரமான வாத்ய கோஷம் கோஷித்துக்கொண்டே இருக்கிறதே என்ன விசேஷம்?" என்று ஓர் யௌவன வாலிபன் தன் சிநேகிதனைக் கேட்டான்.

உலகநாதன் :—ஓ! இது தெரியாமலா கேட்கிறாய்? இன்றுடன் இவ் வருடத்திய கல்யாண கார்ட்டு சாத்திவிடுகிறார்கள். ஆதலால் இன்று ஆனி மாதக் கடைசி முகூர்த்தமாதலால் எங்கெங்கே இருக்கும் கன்யாப்பெண்களுக்கும் இன்று கல்யாணமாகிவிடுகிறது. அதுதான் கொட்டு மேள முழக்கமும், வீதியில் கலகலப்பான சந்தடியும் இருக்கிறது. உன்னைக்கூடவன்றோ இந்த மாதத்திற்குள் கல்யாண மாப்பிள்ளையாகப் பார்ப்பேன் என்று நினைத்தேன். நீதான் ஏய்த்து விட்டாயே!...இனிமேல் அடுத்த வருடந்தானே?....அடேயப்பா என்ன வெட்கமோ தெரியவில்லை. நானும் ப்ரம்மச்சாரியாயிருக்கும் போது இப்படித்தான் நாணிக் கோணினேன். இப்போ பாரு... சொல்லுப்பா.

மகாதேவன் :—லோகு !....(இது அவனுடைய குறுகிய பெயர்) என் கல்யாணத்தைப்பற்றித்தான் பேசவேண்டாமென்று பலதரம் கூறி இருக்கிறேனே...அதைக் கேட்காதே ... விட்டுவிடு .... அதோ பாரு ..ஒரு மாப்பிள்ளை காசி யாத்திரை போகிறார். அடாடா... இன்னும் பின்னால் பாரு; அடுக்கடுக்காய் நாலைந்து மேளம் வருகிறது...மாப்பிள்ளைகள்தான் வருகிறார்கள்....வீதியில் சென்று பார்க்கலாம் வா...என்று பேசிக்கொண்டே இருவரும் மெத்தையை விட்டு இறங்கி வீதிக்கு ஓடி வந்தார்கள்.

லோகு :—மகாதேவா!......பேஷ்! அந்த மாப்பிள்ளையின் ஜோரான நடையைப் பாரேன். பிள்ளையாண்டானும் நல்ல முக வெட்டுடன் ஜோராகத்தானிருக்கிறான். பெண் எப்படியோ பாவம் ...ஐயயோ! இந்த மாப்பிள்ளையின் அழகைப் பாத்தயா...அட க்ரகசாரமே .... இவர் மாப்பிள்ளையல்லப்பா ... அல்ல ... மாப்பிள்ளை தாதா......

மகா :—என்ன கல்யாணம் வேண்டி இருக்கு...குறைந்தது 45 வயதிருக்கும்போல் தோன்றுகிறதே .... மூன்றாந்தாரமா! நான்காந் தாரமா! ... இவருக்கு காசியாத்திரைக் கோலம் வேறு வேணுமா... ஐயோ! எந்த பெண்ணின் தலையில் இம்மாதிரி எழுதிவிட்டானோ தெரியவில்லையே....லோகு!.... நாம் கூடவே செல்வோம்...இந்த மாப்பிள்ளைகளின் ஜோடி எப்படி இருக்கிறது பார்க்கலாம் வா...என்று கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனான்.

ஒரே தெருவில் நாலைந்து வீடுகளில் வாழைமரமும், கல்யாணச் சின்னங்களும் இருந்தன. மாப்பிள்ளைகளில் சிலர் வேறு இடத்தில் விவாகமாகையால் போய்விட்டார்கள். மீதி மாப்பிள்ளைகள் (மாப்பிள்ளை தாதா உள்பட) இங்கு வந்தார்கள். பெண்ணும் பிள்ளையும் அழகாயும் பொருத்தமாயும் அமையும் ஜோடி எங்கோ ஒன்றுதான். ரதிபோல் விளங்கும் பெண்ணுக்கு கோரஸ்வரூபியான புருஷன். மன்மதன்போன்ற பிள்ளைக்கு பயங்கர ஸ்வரூப தேவி. இது வெகு இடங்களில் சகஜமல்லவா!

வயோதிக மாப்பிள்ளையின் கண்ராவியைப்பற்றிப் பேசாதோர் கிடையாது. காசியாத்திரையானவுடன் உள்ளிருந்து பெண் வந்து

மாப்பிள்ளையின் பக்கத்தில் நின்றாள். பெண் உயர்ந்த அழகில் சேராவிடினும் பார்ப்பதற்குப் பளிச்சென்றிருந்தாள். அப் பெண்ணின் முகத்தைப் பார்க்கும்போதே அழுது அழுது வீங்கி இருப்பதுபோல் தோன்றியது. இதைப் பார்த்துப் பார்த்து வீதியில் செல்வோரும் பரிதாபப்பட்டார்கள்,

மகாதேவனும், லோகுவும் "ஐயோ! பாவம்! இம்மாதிரி ஒரு கல்யாணத்தைச் செய்யாவிட்டால் யாரடித்தது? பெண்ணைக் கிணத்தில் தள்ளிக் கொன்றிருக்கலாம். கண்ராவிக்கல்யாணம்' என்று வருந்தியபடியே அங்கிருந்த ஒருவரை நோக்கி "ஏன் பெண் அழுகிறது?" என்று தேவன் கேட்டான்.

அந்த மனிதர் :—இதுகூட கேட்கவேண்டுமா? மாப்பிள்ளையைப் பார்த்தீர்களோன்னோ! பெரிய பணக்காரர்தான். முன் இறந்த இரண்டு சம்சாரங்களுக்கும் ஒன்னரை டஜன் குழந்தைகளும், ஒரு டஜன் பேரனும் பேத்தியும் இருக்கிறார்கள். கல்யாணப் பெண் மனைவியாகும்போதே பாட்டியாயும், வெகு சீக்கிரத்தில் கொள்ளுப்பாட்டியாயும் ஆய்விடுவதற்கு இசைவாளா! அதான் அழுகை. தரித்திரந்தான் காரணம்.

மகாதே :—பணத்திற்காகவா பெண்ணை பலி கொடுக்கிறார்கள்! ஐயோ! பாவம்....

அந்த மனி :—ஆமாம் ஐயா!...ஆமாம்...பெண்ணோடு பிறந்தவர்கள் 9 பெண்ணும், 4 பிள்ளையும். அத்தனையும் பிழைக்க வேண்டும். காலமோ பஞ்சம் நிறைந்ததாயிருக்கிறது. வேலையோ வருமானமோ கிடையாது. நிலங்களோ வரண்டுவிட்டன. வேறு என்ன செய்ய முடியும்? கிழவர் பெரிய பணக்காரராதலால் 10 ஆயிரம் ரூபாய் முதல் வைத்து ஒரு ஜவுளிக்கடையை பெண்ணின் தகப்பனர்மீது எழுதிக்கொடுத்துவிட்டார். அதனுல் நல்ல ஜீவனம் செய்யலாம். பெண்ணுக்கு வைர அட்டிகை முதல் போட்டிருக்கிறார். பெண்களுக்கு நகைதானே ப்ரதானம்; அவ்வளவுதான். கல்யாணம் ஜாம் ஜாம்மென்று நடக்கிறது. பெண் அழுதாலென்ன அவஸ்தைப்பட்டாலென்ன......

மகாதே.—ஐயோ! வயிற்றில் எரிகிறது. என்ன அனியாயம்! நான் மட்டும் ஓர் அதிகாரத்தில் இருப்பவனுயிருந்தால் இந்த கல்யாணத்தைத் தடுத்து கிழவனையும் பெண்ணின் தகப்பனுரையும் கைதியாக்க ஒரு புதிய சட்டமே தயார் செய்துவிடுவேன். அத்தனை ஆத்திரம் வருகிறது. அந்த பெண்ணின் தாய்தகப்பனுக்கு மனத்தில் ஈவிரக்கமென்பதே கிடையாதா?....

என்று இவன் சொல்லும்போது இவனுக்குப் பின்னல் ஒரு குரல் "ஆமாம்! ஈவிரக்கமிருந்து சிறு வயதை மட்டும் பார்த்து ஒரு தரித்திரத்திற்குக் கொடுத்துவிட்டால் பிறகு பத்து குட்டிகளையும் பெற்றுக்கொண்டு பிண்டத்திற்கு அடதாளம் போடும்போதும், துண்டத்திற்கு த்ருவதாளம் போடும்போதும் அதே தாய்தந்தையரின் வயிறு எரியாதா?... வீடும் வாசலும், நகையும் நட்டும், பணமும் பாக்யமும் ஓர் ஜெமீந்தாரினிபோல் இருக்கையில் புருஷன் கிழவனுகவிருந்தால் என்ன மோசம் முழுகிப்போய்விட்டது? இல்லை....அவன் செத்தால்தான் என்ன புரண்டுவிட்டது....இருக்கிற வரையில் பணத்துடன் சந்தோஷமாகவிருக்கவேண்டும். அவ்வளவுதான்'' என்றது.

இதைக் கேட்டு ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்த மகாதேவன் திடுக்கிட்டு சற்று அசைவற்று நின்ருன். "ஓ!...மாமாவா.... எப்போ வந்தீர்கள்? மாமி, அனுசூயா, அருணுசலம் முதலியோர் கூட வந்திருக்கிருர்களா!'' என்று விசாரிக்கிருனேயன்றி அவர் சொல்லிய வார்த்தைகள் கூரிய ஈட்டியைப்போல் இதயத்தில் பொத்தின.

மகாதேவனுக்கு ஒன்றுவிட்டு மாமன் முறையாக வேண்டிய ராமலிங்கம் என்பவர் தற்காலத்து நாகரிகமும் டாம்பீகமும் நிறைந்த பணக்காரர். அவருடைய மனைவி அவரைவிட அதிகமான படாடோபத்திற்கு அடிமையானவள். தற்காலத்து நாகரிகப்படி க்ளப்புக்குப் போவது, பலவிதமான பந்தாட்டங்களாடுவது, வேளைக்கு ஒரு உடுப்பு உடுத்துவது, ஒரே மாதிரி கலரில் நகைகள், உடைகள், கால் செருப்பு, கையிலுள்ள வளையல், கையில் பிடித்துக்கொள்ளும் பை முதலிய யாவும் அணிவதில் மிகுந்த ப்ரீதியுடையவள்.

தனது அருமையான ஒரே குமாரத்தி அனுசூயாவுக்கு தன்னைவிட அதிகமாக அலங்காரம் செய்து தலையை நாகரிகப்படி பாப் (bob) செய்தும் பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுவாள். ஆனால் அந்த தாயாருக்கு நேர் விரோதமாக அனுசூயா மிகவும் எளிய வாழ்க்கையையே த்ருப்தியாகக்கொண்டு அதன்படியே நடப்பவள். தாயிக்கும் மகளுக்கும் பலதரம் இவ் விஷயங்களில் சண்டை வரும். தாய் ஒரு கோடி, மகள் மற்றொரு கோடி. "இவ் வாடம்பரத்தினால் உனக்கென்ன அதிக மதிப்பு, எனது எளிய அலங்காரத்தினால் எனக்கென்ன குறைந்துவிட்டது?" என்று அடிக்கடி கேட்பாள்.

எங்கெங்கெல்லாம் டீ பார்டி, டின்னர் பார்டி முதலியவற்றிற்கு அழைப்பு வருகிறதோ அங்கெல்லாம் இத் தம்பதிகள் தவறமாட்டார்கள். அனுசூயாவை கெஞ்சினாலும் வரமாட்டாள் "பணம் கொழுத்துப்போய் பசி இல்லாத அஜீர்ணக்காரர்களுக்கே இந்த பார்டியும், மண்ணும் நடத்துவதில் என்ன ஓசத்தி பசி பசி என்று துள்ளும் ஏழைகளுக்கு வைத்தால் எத்தனை நன்றாகவிருக்கும்?" என்று அனுசூயா தர்க்கம் செய்வாள்.

"ஏழைகளின் மூஞ்சியைப் பார்த்து அதற்கு பார்டி ஒரு கேடா! பார்டிதான் கொடுக்கவேணும்!....மூஞ்சிலே அடித்துத் துரத்தினாலன்றி அவர்களின் உபத்திரவம் தீருமா என்ன?...ஏழைகளும் தொத்து வ்யாதியும் ஒன்றல்லவா! ஏழைகளுக்கு ஒரு வேளை ஐயோ பாவமென்றால் அதோடு குடி கெட்டது இரும்புருக்கி நோயின் புழுக்கள்போல் அரித்துவிடமாட்டார்களா! உன் தலை யெழுத்து ஏழை ஏழை என்று அடித்துக்கொள்கிறாய் சுகமாக இருக்க அதிர்ஷ்டமிருந்தும் நீ கொடுத்துவைக்கவில்லை. அது எங்கள் கர்மம்" என்று தாயும் தகப்பனும் முணுமுணுப்பார்கள்.

மகாதேவன் கேட்டு வாய் மூடுவதற்குள் விபரீத அலங்கார தேவதையாய் மிஸஸ் ராமலிங்கம் பிரஸன்னமானாள். அந்தம்மாளின் பெயர் என்னவோ கர்னாடகமான குப்பம்மாள் என்பதுதான். அவர்களின் பெற்றோருக்கு முதல் இரு குழந்தைகள் செத்துப்போய்

வெகு நாள் கஷ்டப்பட்டுப் பிறகு மூன்றாவதாக இந்த தேவதை அவ தாரமானதால் இவளைக் குப்பையில் போட்டுப் புரட்டி, மூக்குக் குத்தி செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து இதுவாகிலும் உயி ருடன் இருந்தால் போதும் என்று குப்பம்மா, பிச்சம்மா, எமன் என்று மூன்று திருநாமங்களைச் சூட்டினார்கள்.

வேறு செல்லப் பெயர்களை வைத்து அழைத்தால் குழந்தை இறந்துவிடுமோ என்ற பயத்தினால் தாயார் குப்பு என்றும், தகப்ப னார் எமனே என்றும், பாட்டியும் பாட்டனும் பிச்சை என்றும் மற்ற பந்துக்கள் இம் மூன்றில் இஷ்டமானவற்றையும் கூப்பிடுவார்கள். குப்பம்மாளுக்கு வயதாக ஆக இப் பெயர்கள் பிடிக்கவே இல்லை. எத்தனையோ புதிது புதிதாக உள்ள வனஜா, வஸந்தா, ஸரோஜா,... ருக்மஜா....முதலிய அழகிய பெயர்களில் ஒன்று தனக்கு விளங்க வேண்டுமென்று சண்டை செய்து பார்த்தும் ப்ரயோஜனமில்லாது போய்விட்டது.

விவாகமாகிய பிறகு பழய பெயர் அடியோடு மறைந்துவிடும் பொருட்டு மிஸஸ் ராமலிங்கம் என்ற பெயரிலேயே விளங்கிவிட் டாள். இன்றும் நாளையும் சொந்தக்காரர்கள் என்னவோ குப்பு, பிச்சு, எமன் என்றுதான் அழைக்கிறார்கள். அப்படி அழைக்கும் போது அம்மாளின் முகத்தில் அசட்டுக்களையும், அவமானமும் தாண்டவமாடும். "இனிமேல் இம்மாதிரி அழைத்தால் எனக்கு கெட்ட கோபம் வரும் ஜாக்ரதை." என்று கண்டிப்பாள்.

அத்தகைய மிஸஸ் ராமலிங்கமும், மிஸ்டர் ராமலிங்கமும் அங்கு வந்தார்கள். கல்யாண வீட்டுக்காரர்கள் "அதோ! அதோ! பிச்சம்மா வந்துட்டா! அனுசூயா வந்துட்டா!..."பிச்சு...இந்தாடி யம்மா! ஒன் பொன்னான கையால் ஆலத்தி எடும்மா....வாங்கோ... ராமலிங்கம்வாள் ... அருணாசலம் எங்கே! .... வாடியம்மா ... அனு சூயா...அடுத்த வருடம் உன் கல்யாண வைபவம் இருக்கிறது. அது இப்படியா ஏழைக் கல்யாணமாயிருக்கும்? தடபுடல் படாதா?"... என்று வந்த ஒவ்வொருவரும் வஞ்சனை இன்றி ஒவ்வொரு வார்த்தை சொன்னார்கள்.

மிஸஸ் ராமலிங்கத்திற்கு முதல் மரியாதை கொடுத்து ஆலத்தி எடுக்கச் சொல்லியதில் பெருமை அபாரமாகப் பொங்கிவிட்டது. ஆனல் ஆரத்தி தட்டைப் பிடித்துச் சுத்தினல் கையில் ஆரத்தி பட்டுவிடுமே என்று தியங்கியபடியே நாசூக்காக தட்டை வாங்கி பட்டிக்காடு மாதிரி குனியாமல் நின்றபடியே ஆரத்தி தட்டிற்கு நோகுமோ, கை விரல்களுக்கு நோகுமோவென்று மெல்ல சுழற்றினுள். சிலர் இதை யோர் வேடிக்கைபோல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்படி சுழற்றும்போதும் இவள் கட்டிவந்த அழகிய புடவையில் ஆரத்தி சிதறிப்போய் பட்டுவிட்டது. இந்த வேதனையில் தட்டைக் கோணமாணலாகப் பிடித்து ஆட்டியதில் மாப்பிள்ளை தாத்தாவின் வேஷ்டியில் மொத்தமும் கொட்டிவிட்டது.

உடனே கொல்லென்ற நகைப்பு சில குரும்புக்காரப் பிள்ளைகளிடமிருந்து வந்துவிட்டதை மிஸஸ் ராமலிங்கம் தாங்குவாளா! முகம் கடுகடுத்தது. "போடியம்மா...நல்ல குழிவான தாம்பாளம் குடுக்கமாட்டியோ! என் புடவை பாழாகிவிட்டது" என்று கூறிக்கொண்டே உள்ளே போனுள். அழுத கண்ணும், வழிந்த மூக்குமாகவிருக்கும் மணப்பெண்ணுக்கும் சிரிப்பு வந்துவிட்டது. மாப்பிள்ளைதாதா சாமர்த்தியமாக சிரிக்காமலிருந்தும் அவரால் முடியாமல் வாயில் கட்டி இருக்கும் பல் வரிசைகள் சிலருக்குத் தெரிய வேண்டிய க்ரகசாரம் வந்துவிட்டது.

பணக்காரர்களை வரவேற்க எத்தனை தடபுடல் நடக்கும் என்பதைக் கூறவேண்டுமா? "அண்ணு! பலகாரம் சாப்பிட வாங்கோ" என்போரும், "அண்ணு" நீங்கதான் பந்தல்லெ உட்கார்ந்து சகலத்தையும் கவனிக்கவேண்டுமென்போர் சிலரும், "அடெய்......... அண்ணு கையில் பணப்பையைக் கொடு" என்போர் சிலருமாக ஆரம்பித்தார்கள்.

இந்த தடபுடலில் ராமலிங்கம் ஒய்யார நடை நடந்துபோய் விட்டாரே யன்றி ஏழையான மகாதேவன் கேள்விக்குப் பதிலே பேசவில்லை. தோகை விரித்தாடும் மயில்போல் அனுசூயா சாதாரணமான அலங்காரத்துடன் சென்றதானது எல்லோருடைய உள்

எத்தையும் கொள்ளைகொண்டது. அவள் தாயின் விபரீத அலங்காரம் பலருடைய உள்ளத்தில் வெறுப்பை யளித்தது.

தாயும் மகளும் செல்வதைக் கண்ட மகாதேவன் திகைப் பூண்டை மிதித்தவன்போல் நின்றான். சாதாரணமாகப் பார்க்கும் மனிதர்களே அனுசூயாவை இமை கொட்டாமல் பார்க்கும்போது அவளிடம் தன்னுயிரையே வைத்துக் காதல் கொண்டிருக்கும் மகாதேவன் திகைத்து நின்றது வியப்பா! ஓர் ஜோதி பளிச்சென்று அங்கு உதயமாகியதுபோல் தோன்றியது.

அனுசூயா வயது வந்த பெண்ணானகையால் வீதியில் நிற்காமல் வாசற் கதவருகில் சென்று நின்றாள்; அவளுடைய விழிகள் கல்யாண மாப்பிள்ளையும் பெண்ணும் இருக்கும் திக்கை நோக்கியவுடன் அவள் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களை அவளால் சகிக்க முடியவில்லை. நாம் கல்யாணத்திற்கு வந்திருக்கிறோமா, அன்றி'.... என்ற சந்தேகமும் வந்து முகமே விகாரப்பட்டுவிட்டது.

அப்படியே அந்த திக்கைப் பார்க்கும்போது மன்மத வடிவுடன் ப்ரகாசிக்கும் மகாதேவனின் முகத்தைப் பார்த்துவிட்டான். அவளை யறியாது தேகம் சிலிர்த்தது. அவளால் கண்டுகொள்ள முடியாத ஓர் ஆநந்த உணர்ச்சி தேகமுற்றும் சுற்றிக்கொண்டது. "அத்தான்!" என்று அழைத்துவிடவும் நெஞ்சு துடித்தது. தன் மாறுதலை யார் கண்டுபிடித்துவிடுவார்களோ என்ற பயமும் உண்டாகியது.

இவர் இங்கு நாம் வருவதைத் தெரிந்துகொண்டுதான் வந்திருக்கிறாரா என்ற சந்தேகமும் உதித்தது. இருவருடைய விழிகளும் வெகு தூரத்திலிருந்து சந்தித்தபோதிலும் ஆழமான ரகஸ்யங்களை அரைக்கணத்தில் பேசிக்கொண்டன. இதற்குள் கல்யாண தம்பதிகளின் சடங்கு முடிந்து உள்ளே மணவறைக்குப் போகப் புறப்பட்டதால் அனுசூயாவும் உள்ளே போய்விட்டாள்.

வீதியில் யாருமில்லை. காலியாகிவிட்டது. பித்தன்போல் மகாதேவனும், லோகுவும் நின்றார்கள். மகாதேவன் மனத்திற்குள் வேலை செய்யும் ரகஸியத்தை லோகு எப்படி அறியக்கூடும்? கிழவ

னின் கல்யாணத்திற்காகவே கவலைப்படுவதாக லோகு நினைத்தான். மகாதேவனுக்கு எங்கும் இருண்டுவிட்டதுபோலாகிவிட்டது. தான் சற்றும் கனவிலும் எதிர்பாராத விதம் இன்று தன் காதலியைக் கண்ட பேரானந்தமும், கண்டும் பேசமுடியாது போய்விட்ட விசனமும் ஒருங்கு கூடிப் பொங்கின.

"மகாதேவா! பெண்ணைப் பெற்றவர்களே கண்ணை மூடிக் கொண்டு கிழவனுக்கு மனமொப்பித் தள்ளும்போது நீயும் நானும் கண்ணீர் விட்டுப் பலன் யாது? அதோ! இன்னொரு மாப்பிள்ளை காசி யாத்திரை வரார். அதைப் பார்க்கலாம் வா" என்று கையைப் பிடித்து இழுத்துச் சென்றான். பெண்ணும் பிள்ளையும் பழய சம்பிரதாயப்படி அம்மான் தோள்மேல் ஏறி மாலை மாற்றினார்கள்.

இருவருடைய அழகும் வெகு பொருத்தமாயும் ஜோடியாயும் இருந்ததோடு அவர்களின் மன ஒற்றுமையை அவர்களது ப்ரஸன்ன வதனமே காட்டி விட்டது. "என்ன சிரிப்பு! என்ன கடைக்கண் பார்வை! என்ன குதூகலம்! அடாடாடா.........அத்தகைய ஆநந்தகரமான கல்யாணமல்லவோ செய்யவேண்டும். சம்மந்தி வீட்டாரும் வெகு பொருத்தமாக அமைந்திருப்பது பேரற்றத் தக்கது. என்ன ஆநந்தம்"...என்று ஒவ்வொருவருடைய வாயும் தானகவே சொல்லியது.

மகாதேவனுக்கு, "ஹா!......எனக்கும் அனுசூயாவுக்கும் விவாகமானல் இதைவிட ஆயிரம் மடங்கு ஆநந்த சாகரத்தில் மூழ்குவோம் அல்லவா? ஊம். இது மூடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது போலத்தானகும். நமக்காவது அனுசூயாவைக் கொடுப்பதாவது?" என்ற உணர்ச்சி தோன்றும்போது மனத்தைக் கலக்கிவிட்டது. இதற்குள் மணியும் 9 ஆகிவிட்டதை யறிந்ததும் இருவரும் காலேஜிக்கு நேரமாகி விட்டதை உணர்ந்து ஓட்டமாகத் தம் விடுதியை அடைந்தார்கள்.

மகாதேவனின் மனமோ இருக்கை கொள்ளவில்லை. காலேஜி மாணவர்களுடன் இவனும் ஹாஸ்டலில் தான் இருக்கிறான். ஒரு அறையில் குறைந்தது 3—4 மாணவர்களாவது

வஷித்து வருகிறார்கள். ஆகையால் வருத்த முற்றும், சந்தோஷ முற்றும் அதை மறைக்க முடியாமல் எல்லோரும் அறிந்து கொண்டு "என்ன! என்ன!" வென்று கேட்பது வழக்கம்.

மகாதேவன் தன் கலக்கம் தெரிந்து விடப்போகிறதே என்று சாமர்த்தியமாய் தன் காலை வேலைகளை முடித்துக் கொண்டு காலேஜிக்குப் போய் விட்டான். அன்று காலேஜில் ஒரு முக்யமான பெரிய பண்டிதர் வந்து பேசப் போகிறாராதலால் எல்லோரும் இருக்கவேண்டியதவசியமாகிவிட்டது. மகாதேவன் எந்த ப்ரஸங்கத்திற்கும் தவறாமலிருப்பவன். இன்று இல்லாதுபோய் விட்டால் வீண் சந்தேகத்திற்கு இடமுண்டாகுமென்று மனத்தில் பாதிக்கும் விசனத்துடன் நின்றான்.

ப்ரஸங்கமோ வெகு அழகாகவும், அருமையான விஷயங்கள் அடங்கியதாகவும் இருந்ததாகையினால் ஆநந்தமாகக் கேட்டு விட்டு எல்லோரும் கலைந்தார்கள். மணி 7 ஆகிவிட்டது. ஹாஸ்டலில் மாணவர்களின் வாழ்க்கை விநோதங்கள் பல பல மாதிரியான லீலைகளுடன் கூடியன. சில மாணவர்கள் உண்மையில் தமது வாழ்க்கைக்குப் பல துறைகளிலும் பயன் படுவதற்காகவே கல்விச் செல்வம் வேண்டும். அதை நன்றாகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற பெரும் ஆவலுடன் கற்றுக் கொள்கிறார்கள்.

பின்னும் சிலரோ, பெற்றோர்கள் தம் மகன் படித்து பெரிய பட்டங்கள் பெற்றால் போதுமென்று வாயை வயிற்றை ஒடுக்கிப் பணத்தை யனுப்ப, மாணவர்களோ அவர்களின் கஷ்டமறியாது தாம் தூம் என்று செலவு செய்வதும் சினிமா, ஓட்டல் முதலியவற்றிற்கு கூசாமல் சென்று பணத்தைப் பாழாக்குவதும், படிப்பிலும் சிரத்தை இல்லாது தோல்வியையே வரவேற்பதுமாக இருக்கிறார்கள்.

மற்றும் சிலர் கடனும் வாங்கத் தியங்குவதில்லை. "உடனே பணமனுப்பாவிட்டால் தூக்கு மாட்டிக்கொண்டு சாவேன். கடலில் குதித்து மாளுவேன். உங்களுக்கு பிள்ளை வேண்டுமாயின் உடனே

அனுப்புங்கள்'' என்று பயங்கரக் கடிதத்திலேயே தாய் தந்தையரை வதைத்துப் பாடாய் படுத்துவார்கள்.

நமது மகாதேவன் முன் கோஷ்டிகளில் சேர்ந்தவனில்லை. ஆனல்! அவனுக்கு தாயின் வறுமையும், கஷ்டமும், அருமையும் தெரிந்தும் கூட ஷோக்காக உடுத்தியும் வாசனைகள் ஓயாமல் பூசியும் இருக்க ப்ரியப்படுவான் தனக்காக பள்ளிக்கூட சம்பளம் என்னவோ உதவிச் சம்பளமாகக் கிடைத்து விடுகிறது. தாயார் அனுப்பும் பணத்திற்கு அவன் வயிற்றிற்குத் தின்று விட்டு உடைகளை ஜோராகப் போட்டு மகிழ்வான். இந்த ஒரு குணந்தான் அவன் சக்திக்கு மீறியதாக விருக்கிறது. அதை அவனல் தடுக்கவே முடியவில்லை.

ஆடம்பரமான உடையுடன் வாஸனையும் கமகமவென்று வீச, காலை சென்ற கல்யாண வீட்டிற்குப் போனன். வீட்டில் சந்தடியே இல்லை. ஜில்லென்று இருந்தது. ஒரு குமாஸ்தா வந்து “உங்களுக்கு சத்திரம் வேண்டுமா?'' என்று கேட்டான். மகாதேவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது “எனக்கு ஒன்றும் வேண்டாம். காலையில் கல்யாணம் நடந்ததே அவர்கள் எங்கே?'' என்றுன்.

குமா:—சாப்பாடாகிய உடனே அவர்கள் எல்லோரும் ஊருக்குப் போய் விட்டார்கள். பெண்ணும் பிள்ளையும் ஹனிமூனுக்கு ஆங்கிலேயர்களைப் போல்போய்விட்டார்களய்யா....என்று கூறிச் சிரித்தான்.

அதற்குமேல் மகா தேவனுக்கு அங்கு வேலை யொன்றுமில்லை எனினும் தன் மாமனைப் பற்றிக்கேட்க நினைத்து “என் சார்! ராவ் பகதூர். ராமலிங்கம் காலையில் வந்திருந்தாரே அவர்களும் போய் விட்டார்களா?'' என்றுன்.

குமாஸ்தா:—ஓ......அந்த அலங்காரவதியின் புருஷரா........ அப்போதே போய்விட்டார்கள். கல்யாண மாப்பிள்ளை தாதாவின் மகனுக்கு அந்த ராவ் பகதூரின் மகளைக் கொடுப்பதாக கல்யாணப் பேச்சு கூட நடந்தது.

மகாதே:—என்ன! என்ன!........மாப்பிள்ளை தாதாவின் மக னுக்கா! அவன் என்ன செய்கிறன்......படிக்கிருனு......அல்லது உத்யோகமாயிருக்கிருனு?

குமாஸ்:—எம். ஏ. பாஸ் பண்ணி விட்டானும். ஐ. ஸி. எஸ். படிக்க சீமைக்கு போகப் போகிறனும். அவனேடு கூடவே மாமி யார், மாமனர் முதலிய எல்லோரும் போகப் போகிருர்களாம். பெரிய தடபுடலாக பேச்சு நடந்தது சார்.

மகாதே:—அப்படியா! மெத்த சந்தோஷம். பையன் இங்கு வந்திருந்தாஞ? நீர் பார்த்தீரா......எப்படி இருக்கிருன்? பெண் ணுக்குத் தகுந்தவன் தானு...

குமாஸ்:—அதெல்லாம் கேட்காதீர்கள். மாப்பிள்ளை தாதா வைப் பார்த்தால் அவர் மகனைப் பார்க்க வேண்டாம். கிழவர் ரெட்டைச் சரீரம் பையன் ஒற்றைச் சரீரம்; இவ்வளவுதான் வித் யாஸம். கிழவருக்கு சொந்த பல் போய் இரவல் பல் வந்து விட் டது. பையனுக்கு சொந்தப் பல்லே தாராளமாக, கணிசமாக கீழ் உதட்டை மேற்புறம் அணைத்துக் கொண்டிருக்கிறது. கிழவருக்கு தலை முழுதும் மொட்டை. மகனுக்கு இப்போது தான் ஆரம் போத்ஸவத்திலிருக்கிறது.

மகாதே:—பெண்ணும் பிள்ளையும் பார்த்துக் கொண்டார்களா! இஷ்டப் பட்டார்களா! பெண்ணுக்கு சம்மதந்தானு?

குமாஸ்:—அந்த பெண்டுகள் ரகஸ்யங்கள் எல்லாம் எனக்கு எப்படி சார் தெரியும்? இத்தனை தூரம் வார்த்தை நடந்ததி லிருந்து இஷ்டப்பட்டுதான் இருக்க வேண்டும் என்று எண்ணு கிறேன்....

மகாதேவனுக்கு அதற்குமேல் அங்கென்ன வேலை? ஏற் கெனவே உள்ள வேதனையோடு இன்னும் புதிய இவ்விஷயத்தைக் கேட்டதும் மன வருத்த மடைந்து "சரி. நான் போய்வருகிறேன்" என்று விடை பெற்றுக் கொண்டு நேரே தன் ஹாஸ்டலுக்குத் திரும்பி வந்தான்.

ஏற்கெனவே மனவேதனையுடன் இருக்கும் மகாதேவனுக்குத் தன் காதலியை ஓர் கோரஸ்வரூபத்திற்குக் கொடுக்கப்போகிறார்கள் என்றதைக் கேட்டதும் பின்னும் அதிகரித்த வருத்தம் உண்டாகி விட்டது.

இவ்விதமே சில நாட்கள் கழிந்தன; ஒரு கடிதம் வந்தது. அதாவது.—

"ஐயா! உங்கள் தகப்பனாரின் ஆப்த நண்பராயிருந்து, அந்த சினேகத்தினால் உமக்கு இம்மாதம் வரையில் உபகாரச் சம்பளம் கொடுத்து வந்த ஸர் காமகோடி என்பவர் திடீரென்று காலமாகி விட்டார். அவருடைய குமாரர்கள் நால்வரும் அவர் சொத்துக்களை பாகம் செய்து கொண்டு தனித்தனியே போக தீர்மானமும் ஏற்பாடும் ஆகிவிட்டன. இறந்த பெரியார் செய்து வந்த எந்த தர்மத்திற்கும் ஒருவிதமான ஆதாரமும் செய்து (will) வில்லெழுதவில்லை. திடீரென்று போய் விட்டதால் எல்லாம் சின்னபின்னமாகி விட்டது. நான் அந்த புண்ணியவானிடம் 45 வருடமாக குமாஸ்தாவாக விருந்தேன். என்னையும் அவருடைய புத்திரர்கள் அனுப்பி விட்டார்கள். ஆகையால் நான் அவர் தர்ம கைங்கர்யம் நடந்து வந்த இடங்களுக்கு இவ்விஷயம் தெரிவிக்க கடமைப் பட்டிருப்பதால் இதை எழுதுகிறேன். அடுத்த மாத சம்பளத்திற்கே நீர் இப்போதே வேறு எங்காவது ஏற்பாடு செய்து கொள்ளவும்.

இங்ஙனம்

ராகவன்."

இக்கடிதத்தைப் படித்ததும் மகா தேவனின் தலைமீது பெரும் பாறையே புரண்டு விட்டது போலாகி விட்டது. "ஐயோ! இனிமேல் நான் என்ன செய்வது? இதை என் தாயாருக்கு எப்படி சொல்வது?" என்ற பெருங் கவலைக் கடலில் மூழ்கிவிட்டான். முன்பு ஒருவிதமான வருத்தம்; இப்போதோ கரை புரண்ட கலக்கம். என்ன செய்வான் பாவம் இளவல்!

## 2—வது அதிகாரம்

### புளியேப்ப விருந்தும், புனிதத் தொண்டும்

கல்யாண காலத்தில் அடையும் ஆநந்தத்தை விட டீ பார்டீ முதலிய கேளிக்கைகளில் சிலர் பேராநந்தத்தை அடைகிறார்கள். ராவ் பகதூர் ராமலிங்கத்தின் சினேகிதர் ஒருவருக்கு திவான் பகதூர் பட்டம் வந்தது. அதற்காக அந்த பட்டதாரி பட்டாபிராமனுக்கு முதல் முதல் தானே விருந்து கொடுத்து ஜம்பமாக முந்திக்கொள்ள ராவ் பகதூருக்கு அதிக ஆசை. ராவ் பகதூர் தம் மனைவியுடன் கலந்து ஆலோசித்தார்.

மிஸஸ் ராமலிங்கம்:—ஆமாம். கட்டாயம் கொடுக்க வேண்டுவதுதான். அதோடு இன்னொரு காரியமும் கைக் கூடலாம். அதாவது, நாம் இப்போது பார்த்துள்ள பிள்ளையாண்டான் எனக்கு அத்தனை சம்மதமாகப் படவில்லை. ஏனெனில் அவனுக்கு மட்டும் அத்தனை சொத்துக்களும் சேராது. அத்தனை பிள்ளைகளுக்கும் பங்கு. நான்காம் இளையாளுக்கு இன்னும் எத்தனை பிறக்குமோ யார் கண்டது? இனிமேல் இவன் சம்பாதிக்கப் போகிறான் என்று தானே பெண்ணைக் கொடுக்க வேண்டும்? அதைவிட குள்ளப்பட்டி ஜமீந்தாருக்கு ஒரு மகன்—மைனர் ஜமீந்தார்—இருப்பதாகத் தெரிவித்தீர்களே. அவர்களையும் இந்த விருந்திற்கு அழைத்து மெல்ல சரிப்படுத்தி விட்டால் பிறகு நமது அநுசூயாவின் அதிர்ஷ்டத்துக்கு எல்லையே இல்லை. லக்ஷோ லக்ஷமாகப் பணமிருக்கிறதல்லவா?....

ராமலி:—பேஷ்...... பேஷ்........என்னவானாலும் பெண்களுக்குள்ள புத்தியே ஒரு தனித்தது. உன் சாமர்த்தியத்தை தெரிந்து தான் உனக்கு எமன் என்று பெயரிட்டார்கள். எல்லாவற்றிலும்

எமனுகத்தானிருக்கிருய் ... ... திடீரென்று நாம் அவர்களுக்கு அழைப்பு அனுப்பினுல் வருவார்களோ.......அந்த வீட்டில் பெண்டுகளை உனக்குத் தெரியுமோ......

குப்பு:—எங்கள் க்ளப்புக்கு அந்தம்மாள் ஒரு போஷகியாயிற்றே! அவர்களுடன் நான் எத்தனையோ தரம் டென்னிஸ் ஆடி இருக்கிறேன். அவர்களுடன் டீ பார்டியில் சாப்பிட்டிருக்கிறேன் சென்ற வருஷம் வரலக்ஷ்மி நோன்புக்குக் கூட நான் அவர்கள் வீட்டிற்குப் போய் நேரில் அழைத்தேன். அவர்களும் வந்திருந்தார்கள். ஆகையால் கட்டாயம் வருவார்கள். நீங்கள் தவருமல் இதைச் செய்யலாம்.'' என்ருள்.

உடனே எஜமானியின் தீர்மானம் ஏக மனதாக நிறைவேறி விட்டது. டீ பார்டிக்கான ஏற்பாடுகளை அப்போதே செய்யத் துவக்கி எல்லோருக்கும் அழைப்புகள் அனுப்பிவிட்டார்கள். ராமலிங்கத்தின் பெரிய பங்களாவின் தோட்டம் ஓர் தேவேந்திரனது மாளிகையைப்போல் ஜகஜ்ஜோதியாக ப்ரகாசிக்கின்றது. மின்ஸார பல்புகள் தோரணங்களும், வளைவுகளும், நல் வரவு என்ற எழுத்துக்களாகவும், மரங்களில் புஷ்பங்களாயும், கனிகளாயும், பல வர்ணங்களில் ப்ரகாசிக்கின்றன.

மிஸஸ் ராமலிங்கமும், மிஸ்டர் ராமலிங்கமும் தடபுடல் அலங்காரங்களைச் செய்துகொண்டார்கள். மகனும் அப்படியே. அனுசூயாவையும் விலையுயர்ந்த பீதாம்பரமொன்றைக் கட்டிக் கொண்டு, வைர செட்டு நகைகளைப் போட்டுக்கொள்ளும்படி தாயார் கட்டாயப்படுத்தினுள். ஆனுல் அனுசூயா சாதாரணமானதும் அழகாயுள்ளதுமான பகட்டில்லாத ஆடையுடுத்திக்கொண்டு சொல்ப வைர நகைகளையே அணிந்துகொண்டாள்.

இந்த பார்டி அவளுக்கு ஒரு சிறிதும் பிடிக்கவில்லை. ''யாருக்கோ பட்டம் வந்தால் நமக்கென்ன? நாம் ஏன் வீணுக பணத்தைச் செலவு செய்யவேண்டும்? இதை ஏழைகளுக்கு ஏன் செய்யக் கூடாது?'' என்று தாயுடன் சண்டையும், தர்க்கமும் செய்வாள்.

''சீச்சீ...அசடே!...இந்த பெரிய மனுஷ்யதராவே உனக்குத் தெரியவில்லையே...இப்படி எல்லாம் செய்து செய்துதான் உன்

பிதாவுக்கு ராவ் பகதூர் பட்டம் வந்தது. இன்னும் திவான் பகதூரும் வரவேண்டாமா?...இந்த காலத்தின் போக்குப்படியல்லவோ செய்யவேண்டும். பேசாமலிரு''...என்று தாயார் அதட்டினுள்.

அனுசூயா :—இதுதானும்மா ஓர் பெருமை. நம்ம வீட்டில் கல்யாணம், கார்த்தி ஏதாவது வந்து அதற்கு நாம் இப்படிச் செய்தால் பரவாயில்லே. யாருக்கோ பட்டத்திற்கு இத்தனை அமர்க்களம் எதற்கு? அதோடு அந்த சந்தோஷத்தை ஏழைகளுக்கு சாப்பாடு போட்டுக் கொண்டாடினல் த்ருப்தியாகாதா? ...

தாயார் :—போடீ போ...எந்த வேலே பார்த்தாலும் ஏழை, ஏழை என்று அடித்துக்கொள்கிருய். ஏழைக்கு எதற்காக செய்வது? அவர்களுக்கு இந்த உயர்ந்த பலகாரங்களைத் தொடவாவது யோக்யதையுண்டா! தொட்டால்தான் ருசி தெரிந்து அனுபவிக்கத் தெரியுமா! சும்மா இப்படிப் பிதற்ருதே. ஏழைகளுக்குச் செய்வதால் நமக்கு என்ன பலன்? அப்பாவுக்கு பட்டங்கள் வருமா?

அனு :—அம்மா! நீ என்ன விவேகமாகப் பேசாமல் அவிவேகியாகப் பேசுகிருயே! இந்த பகதூரும், சர்ரும் வந்துவிட்டதானல் உனக்கு என்ன லாபம் கிடைத்துவிட்டதாக எண்ணுகிருய்? இவர்களுக்குப் போடுவதால் பணத்திற்கும் நாசம், பலனும் இல்லே. இந்த பட்டங்களைவிடப் பெரிய பட்டமும், பதவியும் ஏழைகளுக்குப் போடுவதால் கடவுள் கொடுப்பாரே. அது இகத்திற்கும், பரத்திற்கும் சார்த்தகமாக விருக்குமே. அதை மறந்தாயோ? இது எனக்கு சற்றும் பிடிக்கவே இல்லே.

தாயார் :—அடீ அனுசூயா!...நீ பேசுவது எனக்கு சற்றும் பிடிக்கவே இல்லே...அதோ கார்கள் வரும் சத்தம் கேட்கிறது. இந்த சமயத்தில் நீ இம் மாதிரி பைத்தியக்கார புராணம் படிக்காதே. கடவுள் கொடுப்பதும், பரத்துக்கு சுகமும் பிறகு இருக்கட்டும். பரத்தையும், உன்னேயும் கண்டார்கள்? பேசாமலிரு. நீ அசட்டுத்தனமாகப் பேசாதே, மடத்தனமாக நடந்துகொள்ளாதே! இத்தனையும் உன் நன்மைக்குத்தான் செய்கிரேம் தெரியுமா! இப்படி மூர்க்கம் செய்யாமல் இங்கு விருந்துக்கு வருகிறவர்களே எல்லாம் வெகு அன்போடு உபசரிக்கவேண்டும். அதுவும் தவிர இங்கு இப்போது

குள்ளப்பட்டி ஜமீந்தார் வீட்டார் எல்லோரும் வருவார்கள். நான் ஜமீந்தாரினியை விசாரிக்கிறேன். அப்பா ஜமீந்தாரை விசாரிப் பார். நீ மைனர் ஜமீந்தாரை விசாரித்து உபசரித்து மரியாதையாக வும், நாகரிகப்படியும் நடக்கவேண்டும். தெரிந்ததா! அவருக்கு உன்னை மணம் செய்வதற்கே இந்த ஏற்பாடுகள் நடக்கின்றன ... விதண்டாவாதம் செய்யாதே...

அனு :—என்ன!... மைனர் ஜமீந்தாரை நான் வரவேற்க வேண் டுமா! உன் நாகரிகத்தின் விபரீதம் அத்தனை தூரம் முதிர்ந்துவிட் டதா?...அம்மா! நீ கூடவா இப்படி பேசுகிறாய்...உனக்குமா இத் தகைய இழிவான புத்தி! சீச்சீ...ஒரு நாளும் நான் அப்படி தேவடி யாள் தனுக்கு செய்யமாட்டேன். என்னைக் கொன்றாலும் சரி. நான் மாட்டவே மாட்டேன். இப்படி சோதிக்கிறதாயின் நான் தலை வலி என்று படுத்துக் கொள்கிறேன். பார்டிக்கே வரமாட்டேன். பேசாமலிருந்தால், பெண்பிள்ளைகளை வேண்டுமாயின் விசாரிக்க வரு கிறேன்.

தாயார் :—அட சனியனே!... உன்னுடைய நலனைக் கோரி நாங்கள் பாடு படுகையில் உனக்கேன் இத்தகைய துர்ப்புத்தி? பெற்ற வர்களுடைய சொல்லைக்கூட கேளாத உன் புத்தியை என்ன சொல் வது?...அதோ....அதோ ... எல்லோரும் வருகிறார்கள். பன்னீர் செம்பை எடுத்துக்கொண்டு வா...ஜமீந்தார் காரும் வந்துவிட் டது.—என்று கூறிக்கொண்டே கேட்டுப்பக்கம் ஓடி வந்தாள்.

விளக்கெண்ணெய் குடித்ததுபோல் அனுசூயாவின் முகம் மாறிவிட்டது. தன் தாயின் விபரீத புத்தியின் போக்கு அவ ளுக்கு கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. தாயும், தந்தையும், தமயனும் கேட்டிலேயே நின்று எல்லோரையும் வரவேற்றார்கள். ஒவ்வொருவ ருக்கும் தம் மகளைக் காட்டி "இவள்தான் எங்கள் மகள் அனுசூயா" என்று அறிமுகப்படுத்திக்கொண்டே இருக்கிறார்கள்.

விதியே என்று அனுசூயாவும் பல்லைக் காட்டியும், மூடியும் நடித்துக்கொண்டிருந்தாள். ஜமீந்தாரும், ஜமீந்தாரினியும் வந் தார்கள். அவர்களுக்கும் அறிமுகப்படுத்தினார்கள். அனுசூயாவின்

முகம் கடுத்தது. அவளுடைய வெறுப்பு அடக்க முடியாததாயிற்று. அடுத்த காரில் பட்டம் பெற்ற ப்ரமுகரும், அவர் குடும்பத்தாரும் வந்தார்கள். அவர்களுக்கும் மரியாதை செய்து ஆசனத்திலமர்த்தினார்கள்.

உடனே மைனர் ஜமீந்தார் வெகு அட்டகாஸத்துடனும் ஆடம்பர அலங்கார சிங்கார புருஷனுய், கையில் வாக்கிங்கு தடியும், வாயில் உயர்ந்த சிகரெட்டும் பிடித்தபடியே வந்தார். "ஹல்லோ... ஹல்லோ...வாருங்கள்" என்று ராமலிங்கம், அருணுசலம் இருவரும் கை குலுக்கினுர்கள். "மிஸ்டர் சொக்கலிங்கம்!...இவள்தான் எங்கள் குமாரத்தி அனுசூயா!"......என்றார்.

"ஓ! அப்படியா! நான் இதுவரையில் பார்த்ததே இல்லே" என்று கையைக் குலுக்க அனுசூயாவிடம் நீட்டினுன். அனுசூயாவின் மனம் பதைக்கிறது. வயிற்றில் ஏதோ சங்கடம் செய்கிறது. ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டு தான் ஆங்கிலேய மாதல்ல; தமிழ்த் தாயின் வயிற்றில் பிறந்தவள்தான் என்று சூசனையாகத் தெரிவிப்பது போல நம் வழக்கப்படியே கைகயைக் கூப்பினுள்.

மைனருக்கு முகத்தில் அசடு தட்டுகிறது......"ஹிஹிஹி... ஆமாம்......நீங்கள் செய்வது சரிதான். நமஸ்காரம் தான் கர்னுடக வழக்கம்"......என்று தத்து பித்து என்று கூறிக்கொண்டே போய் உட்கார்ந்தான். அனுசூயாவின் பெற்ருேருக்குக் கோபத்தால் முகம் சிவந்தது. பெண்ணே சுடச் சுடப் பார்க்கிருர்கள். உரக்கத் திட்ட வருவோரும் போவோருமாயிருப்பதால் மானமாயிருந்தது. "அனுசூயா!, நீ சொல்லியது மகா பிசகு. உன் கையைக் குலுக்கினுல் என்ன கெட்டுப்போய்விட்டது? மூதேவி! ஏன் இந்த விபரீத புத்தி. எத்தனையோ வைத்தியர்கள் தடியன் தடியனுக உன் கையைப் பிடிக்கவில்லையா? அதைவிட இது குறைந்து விட்டதா!" என்று மெல்ல காதோடு கேட்டார்கள்.

அனுசூயாவும் சற்றும் தியங்காமல் "ஆமாம். நாகரிகத்தின் விபரீதம் உங்கள் மூளையைக் கூட தின்றுவிட்டது. வைத்தியர்கள் தொடுவது வ்யாதியையே யன்றி மனிதர்களை யல்ல. இந்த தடியன்

வைத்தியனுமல்ல. எனக்கு இப்போது எந்த விதமான ரோகமும் இல்லை. இப்படி அனுவசியமான காரியத்தைச் செய்ய நான் சம்மதிக்க மாட்டேன்.

கை குலுக்கும் வழக்கமுடைய மேல் நாட்டினரே இப்போது அதை வெறுக்கிறார்கள். கண்டவர்களின் கையைக் குலுக்குவதால் கண்ட வியாதியும் தொத்திக் கொள்ளும். இந்தியர்கள் போல் கையைக் குவித்து நமஸ்கரிப்பதே சிறந்த முறை என்று மேனாட்டுப் பத்திரிகைகளிலும் வந்திருந்ததை மறந்து விட்டீர்களா? இப்படி எல்லாம் செய்யச் சொல்வதானால் நான் உள்ளே போய் விடுவேன்'' என்று முடுக்காகக் கூறினாள்.

பெற்றோரின் ஆத்திரம் கரைபுரண்டது; எனினும் "மகள் இச் சமயம் இங்கில்லாது போய்விட்டால் கேட்பவர்களுக்கு பதில் சொல்ல முடியாதுபோய்விடும். அதோடு விகாரமாகவும் இருக்கும். வருபவர்கள் முன்பு எந்த சச்சரவு மின்றி விருந்து ஒழுங்காக நடந்தால் போதும்'' என்று கோபத்தை யடக்கிக் கொண்டார்கள்.

எல்லோரும் வந்து சேர்ந்தபின் விருந்து சாப்பிட வாரம்பித்தார்கள். அனுசூயா தன் பெற்றோர்கள் இருக்கும் பக்கமே போகவில்லை. பெண் பிள்ளைகளுக்கு மட்டும் தானே நேரில் சென்று விசாரித்து பலகாரம் வாங்கிக் கொடுத்தாள். கோகில விலாஸ் ஓட்டலிலிருந்து விருந்துக்கான சிற்றுண்டிகள் 500 பேர்களுக்கு வரவழைத்தார்கள். 300 பேர்கள் கூட சரியாக வராமையால் 200 தட்டுகளுக்கு மேல் மிச்சமாகி விட்டன.

இந்த விஷயத்தை நேரே அந்த கோகிலா விலாசத்தினரிடமே விசாரித்துக் கொண்டாள். "இங்கு சாப்பாடு முடிந்ததும் இந்த பலகாரங்களை அப்படியே என் வசம் ஒப்புவித்து விடவேண்டும். எல்லாவற்றிற்கும் பணம் கொடுத்தாகிவிட்டதால் இது எங்களுடையதல்லவா?'' என்று திட்டம் செய்தாள்.

உடனே பின் பக்கத்துத் தோட்டத்திற்கு ஓடினாள். இந்த அமர்க்களமான விருந்தை பார்ப்பதற்காக தோட்ட வேலை செய்யும்

ஏழைகளும், இன்னும் அவர்களுக்குத் தெரிந்த பல ஏழைகளும் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றார்கள். அவர்களிடம் சென்று தங்கள் தோட்டக்காரனையும் கூப்பிட்டு "கோவிந்தா! இன்னும் 100 ஏழைகளை உடனே இந்த தோட்டத்திற்கு அழைத்து வா" என்றாள்.

தோட்டக்காரன் அடுத்த குப்பத்திலும், சேரியிலும் உள்ள ஜனங்களை ஒரு விநாடியில் வரவழைத்து விட்டான் பார்ட்டி பாட்டில் தடபுடலாக கொம்மாளமும் கூத்தும் சிரிப்புமாக நடந்து கொண்டிருக்கிறது. அனுசூயா மிச்ச பலகாரங்கள் அத்தனையும் அப்படியே கொண்டுபோய் இலைகளில் வைத்து அத்தனை ஏழைகளுக்கும் கை சலிக்க வாரி விட்டுக்கொண்டிருக்கிறாள்.

இத்தனை ஏழை ஜனங்களும் கண்டேன் கண்டேன் என்று வாயாற வாழ்த்தியபடியே, வயிறாறத் தின்று மட்டற்ற ஆநந்தத்தை யனுபவிக்கிறார்கள் அங்கு பணக்கார பார்டியிலோ சிலர் பாதி பலகாரத்தைத் தின்பதும், சிலர் நாக்கால் எச்சில் செய்து அப்படியே வைத்து விடுவோரும், சிலர் ஒப்புக்குத் தொட்டு வாஸனை பார்ப்போரும், சிலர் நர்ஸுக்காக ஏதோ ஒன்றை ஸ்பூனால் சப்பிக் கொண்டும், அதிலும் சிலர் பகாசுரன்போல் தட்டுகளைக் காலி செய்வோருமாக இருக்கிறார்கள். ஏழைகளோ கையிலுள்ள இலையையும் நக்குகிறார்கள்.

ஏக காலத்தில் இவ்விரண்டையும் பார்த்த அனுசூயாவின் உள்ளம் பொங்கிப் பூரிக்கிறது. இதையே பார்த்துப் பார்த்துப் ப்ரம்மாநந்தமடைந்து கொண்டு நின்றாள். அதே சமயம் அங்கு மைனர் ஜமீந்தாரும், பட்டம் பெற்றவர்களும் "என்ன சார்! அனுசூயாவைக் காணவே இல்லையே. எங்கே சென்றாள்? எங்களுடன் உட்கார்ந்து சாப்பிடுவாள் என்றல்லவோ பார்த்தேன்?" என்றார்கள்.

அப்போதே மிஸஸ் ராமலிங்கம் நாற்புறமும் சுற்றிப் பார்த்தாள். அனுசூயாவைக் காணுமல் எழுந்து உள்ளே சென்றாள். "அனுசூயா! அனுசூயா!" என்று கூவிக் கொண்டே வீடு முற்றும் பார்த்து

விட்டுத் தோட்டத்துப் பக்கம் போனாள். அங்கு ஏதோ இரைச்சலாயும், கூட்டமாயும் இருப்பதைக் கண்டு சீறி விழுந்த படியே "இதென்ன கூட்டம்......இதென்ன அனியாயம்!" என்று கர்ஜித்த படியே சென்றாள்.

அனுசூயா தாயின் முகத்தை ஒரு மாதிரி பார்த்துக் கொண்டே "அம்மா! இதென்ன கூட்டமா!......அங்கு அதென்ன கூட்டம் தெரியுமா?......அது புளியேப்பக்காரக் கூட்டம்......இது பசி யேப்பக்காரக் கூட்டம். இது தானம்மா! இது தெரியாதா?....... என்று கூறி கட கடவென்று கோபமும் ஆநந்தமும் கூடிச் சிரித்தாள். குப்பம்மாளின் கண்கள் சிவந்தன. அவளுக்கு மாத்திரம் இப்போது கொஞ்சம் சக்தி இருப்பின் முக்கண் மூர்த்திக்கு மேல் உக்ரகம் பிறந்து அப்படியே அந்த தோட்டத்தையும், தோட்டத்திலுள்ள எல்லாவற்றையும் த்வம்ஸம் செய்து எரித்துப் பிடி சாம்பலாகச் செய்திருப்பாள். அந்த சக்தி இல்லையே! என்ன செய்வது?

"குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பே! பெற்றோர்களின் மனத்தை நோக வைக்கவா நீ இப்படிச் செய்கிறாய்? அங்கு குழுமி இருக்கும் பெரிய மனிதர்களின் கூட்டத்தின் மகிமை என்ன! இந்த அல்ப நாய்களின் அமளி என்ன? எனக்கு மானம் போகிறதே. வெட்கம் தாங்க முடியவில்லையே. இந்த காபிரி கூட்டங்களை யார் கூட்டியது? போகிறீர்களா, இல்லையா?......ஊம்"...ஊம்"....என்று அங்கிருந்த பெரிய தடியை எடுத்துக் கொண்டு தாண்டவமாடக் கிளம்பி விட்டாள்.

இந்த மகா காளியின் நிர்த்தனத்தைக் கண்டு பயந்து விட்ட ஏழை ஜனங்கள் கைகால் விலவிலத்து நடுங்கிவிட்டார்கள். "ஐயோ! இந்த பாவி வயித்திலா இத்தனை அருமையான பெண்ணு பிறந்தது?" என்று வியந்து மகிழ்கிறார்கள் சிலர் பயந்து ஓடவும் முயன்றார்கள்.

அனுசூயாவா இதற்குப் பயப்படுகிறவள்; தாயின் கைத் தடியைப் பிடுங்கிக் கொண்டாள். ஏழைகளைப் பார்த்து "இருங்கள் இருங்கள். பயப்பட வேண்டாம். சாவதானமாய் சாப்பிடுங்கள்.

இவர்கள் காளிகாதேவி யல்ல; என் தாயார்தான் பயப்படாதீர்கள்; சாப்பிடுங்கள்......அம்மா! வீணுகக் கோபிக்காதே. ருசி தெரியாத நாக்கிற்கு நீ தடபுடல் செய்தாய். அதையே நான் ருசி தெரிந்த நாக்கிற்கும் பங்கு கொடுத்தேன். இதுதானேம்மா நான் செய்த தவறு. 500 தட்டு வரவழைத்தாயே 300 பேர் கூட வரவில்லை. அந்த மூன்னூறில் இருநூற்று ஐம்பது எச்சிலாகி அப்படியே கிடக்கிறது மிச்ச முள்ள இருநூறை அந்த ஓட்டல்காரனே கொண்டுபோய் விடுவதில் லாபமென்ன? அதனுல் அதை யறிந்து உபயோகப் படுத்தினேன்.

இவர்கள் இதைச் சாப்பிட்டு, என்றும் உன்னை வாழ்த்திக் கொண்டே இருப்பார்கள். நீ போம்மா......உன்னைத் தேடிக் கொண்டு யாரோ வருகிருர்கள்...நான் பின்னுலேயே வருகிறேன்... போ...போ'' என்ருள். மிகவும் தர்ம சங்கடமான நிலைமையில் என்ன செய்வாள் பாவம். யாரேனும் தன்னைத் தேடிக் கொண்டு வந்து இந்த கோரமான அவமான காக்ஷியைப் பார்த்துவிடப்போகி ருர்கள் என்ற பயத்தினுல் குப்பம்மாள் சற்று விழித்தாள்.

“சனியனே! என்னைப் பலவிதத்திலும் அவமானம் செய்தது போதும். இனியும் செய்யாமல் நீ இந்த தரித்திர மூதேவிகளை யனுப்பிவிட்டு வந்து, ரெண்டு பாட்டாவது பாடு. அனேகம் பேர் உன் பாட்டைக் கேட்கவேண்டு மென்று பிரார்த்திக்கிருர்கள். அதா வது செய்'' என்று கோபத்துடனும், பரிதாபமாயும் கேட்டாள்.

அனுசூயாவின் மனம் முன்பு பொங்கி எரிந்தது; இப்போது பொங்கி மகிழ்கிறது. ஆதலால் தாயின் கோபத்தை இன்னும் தூண்டாமல் பாடுவதாக ஒத்துக் கொண்டு “அம்மா! இதோ வருகி றேன். ச்ருதிப் பெட்டியை எடுக்கச் சொல்லு; வருகிறேன்....போ... போ'...என்று அனுப்பிவிட்டு இந்த மிச்ச காப்பி டீ, முதலிய எல்லாவற்றையும் காலி செய்து சந்தோஷமாக அவர்களை யனுப்பி விட்டு வெகு சந்தோஷமும் ஆத்ம த்ருப்தியும் அடைந்தவளாய் பாடுவதற்கு வந்து உட்கார்ந்தாள்.

இத்தனை கூட்டத்து மத்தியில் தன்னுருயிர்க் காதலன் வ திருக்கும் பாக்கியம் கிட்டாதுபோய் விட்டதே என்ற ஏக்கமும் துக்

கமும் பனிச்சென்று உதயமாகியது. இவள் ச்ருதி கூட்டும்போதே அனேகர் தூர உட்கார்ந்திருந்தவர்களெல்லாம் அருகில் வந்தமர்ந்தார்கள். மைனர் ஜமீந்தாரும் ஒருவர் என்று சொல்ல வேண்டுமா?

அவன் அருகில் உட்கார்ந்தது அனுசூயாவுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை ஆனாலும் என்ன செய்வது? முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு தன் மனத்தை திடப்படுத்திக் கொண்டாள் அன்று கல்யாண வீட்டில் வீதியில் பார்த்த மகாதேவனின் முகத்தைத் தவிர இந்த ஜமீந்தாரின் முகம் கண்ணிற்குத் தோன்றுமா! சமயத்திற்குத் தக்கபடி அனுசூயா வெகு சாமர்த்தியமாயும், சமத்காரமாயும், கவிச் சக்ரவர்த்தி என்று உலகம் கொண்டாடும். சுப்ரமண்ய பாரதியாரின் இனிய அம்ருதம் போன்ற பாடல்களில் ஒன்றுகிய "ஆசைமுகம் மறந்து போச்சே இதை யாரிடம் சொல்வேனடி தோழி!"

என்ற அதி அத்புதமான கண்ணன் பாட்டைப் பாடவாரம்பித்தாள். "ஆகா! என்ன ஆநந்தம்! என்ன இனிமை! என்ன சாரீரம்! என்ன அர்த்தம்! மனத்தை யுருக்குகிறது. சிலருடைய கண்களில் ஆநந்த பாஷ்பமும் வழிவதை அவர்களுடைய கைகுட்டைகள் தாங்கிக் கொள்கின்றன.

திறந்த வெட்ட வெளியிலே இவள் பாடும் ஆநந்த கானத்தினுல் பரவச முற்று நிற்பவன்போல் பரந்த நீல நிற ஆகாயத்தில் எண்ணிக்கை யற்ற தாரகைகளின் கூட்டத்து மத்தியில், ஜகஜ்ஜோதியாய் ப்ரகாசிக்கும் சந்திரமண்டலத்தில் ஒளிரும் சந்திரன் நின்று விட்டான்.

இங்கு கூடிய கூட்டத்தினரின் மனோபாவங்கள் ஒவ்வொன்று ஒவ்வொரு விதமாக இருந்தது. மைனர் ஜமீந்தாரின் உள்ளத்தில் எழும் விகாரங்களோ கூறத்திறமன்று. வீதி கேட்டின் பக்கலில் சேவகனுல் விலக்கப்பட்டும் விலகாமல் பலர் எட்டி எட்டி இந்த வேடிக்கையைப் பார்ப்பதும், இந்த சங்கீதத்தைக் கேட்பதுமாக விருக்கும் கூட்டத்தில் நமது மகாதேவனும் நின்று இந்த

ஆநந்த கானத்தை அம்ருதம்போல் பருகியவாறு கண்ணீர் பெருக்கு கிறன் என்பதை அனுசூயா அறிந்தால் அவள் உள்ளம் எப்படி இருக்கும்? எப்படி களிக்கும்? எவ்வளவு சந்தோஷத்தில் மிதக்கும்?

---

## 3-வது அதிகாரம்

### மாவிளக்கு மகிமை—மனமுருகாப் புதுமை

ஆநந்தக் காட்சிகளில் அநந்தம் இருக்கின் றன. ஒன்று தானே அனுபவிப்பது; ஒன்று படித் தல், ஒன்று கேட்பது, ஒன்று பார்ப்பது, ஒன்று ஸ்பரிசிப்பது, ஒன்று முகர்வது, மானஸீகமாகவே எண்ணி அந்த எண்ணமாகிய உணர்ச்சியால் உண்டாவது. இப்படியாக எத்தனையோ விதங்களில் மக்கள் ஆநந்தத்தை யடைவதால்தான் பல துக்கங்கள் இருந்தும் அவற்றை மறந்து அந்த நிமிடம் வரையிலாவது சந்தோஷமாகவிருக்கிறார்கள்.

மகாதேவனுக்கு இம் மாதிரி கடிதம் வந்த உடனே அவனுடைய மூளையே குழம்பிப்போய்விட்டதென்றும் கூறலாம். "இதுகாறும் ஞானக் கண்ணைத் திறக்க பரம உபகாரியாக இருந்த தர்மதாதா என் துரதிருஷ்டத்தினலன்றோ இறந்துவிட்டார். நடுவாந்திரமான இச் சமயத்தில் இனிமேல் நான் என்னவிதமாக சம்பளத்திற்கு ஏற்பாடு செய்ய முடியும்? யார் காலைப் பிடித்துக்கொண்டால் அம்மாதிரி ப்ரதிபலனைக் கருதாத உதவி செய்வார்கள்?

ஐயோ! இப்படியா என் கதி யாகவேண்டும்? என்னையே ப்ரபஞ்சமாக நினைத்திருக்கும் என் னருமைத் தாயார் இந்த விஷயத்தைக் கேட்டால் மனம் நொந்து தவிப்பாளே...என்ன செய்வேன்?" என்று தனக்குள் எண்ணுததும் எண்ணித் தவித்து மனம் புண்ணுகிவிட்டான். தற்சமயம் கையிலிருக்கும் பணமோ 5 ரூபாய்

தான். இதைக்கொண்டு என்ன செய்ய முடியும்? எப்போதும் ஈச்வரன் பக்தர்களைத்தான் சோதனை செய்வது வழக்கம். அதேபோல் கதாசிரியர்களும் கதா பாத்திரங்களுக்குக் கஷ்டத்தைக் கொடுத்து வாடவைப்பதுதான் அவர்களது எழுதுகோலின் வேலை.

மகாதேவனுக்கு அன்று முற்றும் குழம்பிக் கிடப்பதைத் தவிர வேறு ஒன்றுமே தோன்றவில்லை. மூளை சிதறிவிடும்போலாகி விட்டதால் மெல்ல எழுந்து ஹாஸ்டலை ஒரு சுற்று சுற்றி வரச் சென்றான். ஒவ்வொரு விடுதியிலும் மாணவர்கள்—படிப்பவர்களும், குசாலாகப் பேசிக்கொண்டு கும்மாளமடிப்பவர்களும், பாட்டு பாடிக் களிப்போரும், எழுதுவோரும், தம்தம் உடைகளை மடித்து வைப்போரும், புத்தகங்களைச் சீர்ப்படுத்துவோரும், தங்களுடைய விடுதியை சுத்தம் செய்வோரும் இப்படி பலவிதமான வேலைகளில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்தான்.

188010.

மகாதேவனுக்கு இந்த ஹாஸ்டல் வாழ்க்கையும் புதிதல்ல; இந்த மாணவர்களைப் பார்ப்பதும் புதிதல்ல. ஆனால் இதுகாறும் அவன் மனத்தில் இவர்களைப் பார்க்கும்போது ஓர் தனித்த உணர்ச்சியோ, ஏக்கமோ உண்டாகக் காரணமில்லை. அவர்களைப் போலவே தானும் ஒருவன் என்ற உணர்ச்சியுடன் கூடிய பார்வையில் இருந்தான். அது சகஜமாகவே தோன்றியது.

ஆனால் இன்றோ, இன்னிமிடமே தனக்கு பெருந் துர்ப்பாக்யம் வந்து சுற்றிக்கொண்டதால் தனது இதுகாறுமிருந்த இன்ப வாழ்க்கைக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டதாயும் அவர்களெல்லாம் மிகவும் சுகவாஸிகளாயும், சுதந்தர ப்ராணிகளாயும் விசாரமற்ற, கவலையற்ற உள்ளத்துடன் இருப்பதாயும் ஓர் புதிய உணர்ச்சி உதயமாகி விட்டது. நாம் இனிமேல் இம் மாதிரி இருக்க முடியாதல்லவா! வீட்டிலே அடைந்து சாகவேண்டுமோ? அன்றி எங்கு வேலையகப்படும் என்று திரியவேண்டுமோ, யார் யாரிடம் பல்லைக்காட்டி உடம்பை வளைக்கவேண்டுமோ!" என்ற கவலையும், விசனமும் உண்டாகி விட்டன.

அவ்வாறு தோன்றும் உணர்ச்சியினால் இங்கு யாவும் புதிதாகவே காணப்பட்டன. வாடிய முகத்துடன் முற்றிலும் சுற்றிப் பார்த்துவிட்டு மீண்டும் தன் னறைக்கு வந்தான். இருக்கை கொள்ளாமல் எழுந்து கடற்கரைக்குச் சென்றான். கடலின் அலைகள் படும் பாடும், தன் நெஞ்சு படும் பாடும் ஒன்றாகவே தோன்றியதால் அங்கும் இருக்கை கொள்ளவில்லை.

விசனத்துடன் உட்கார்ந்திருக்கையில் இவனுடைய சிநேகிதன் லோகு அங்கு வந்தான். அவனிடமும் பழைய மாதிரிப் பேச உணர்வற்ற மகாதேவன் கண்ணீர் பெருகியபடியே "லோகு! என்னுடைய படிப்பும், மாணவ வாழ்க்கையும் முடியும் காலம் வந்துவிட்டது. நானும், என்னை விட என் தாயும் என்னுடைய கல்வியில்—நான் பட்டங்கள் பெறுவதில்—எத்தனை ஆசைகள் பட்டோமோ, அதற்கு முற்றுப்புள்ளியும் சமாப்தியும் உண்டாகிவிட்டன. படித்துக் கிழித்துவிட்டவர்கள் எல்லாம் என்ன புரட்டிவிட்டார்கள்? வேலையில்லாமல்தானே திண்டாடுகிறார்கள். இதனால் விசனமென்னவென்று நீ நினைக்கலாம்.

லோகு! காலம் அப்படி இருப்பினுங்கூட வேலைக்குப் பத்திடங்கள் ஏறி இறங்கும்போது பட்டம் பெற்ற மதிப்புகூட இல்லாவிட்டால் அடியோடு பார்க்கவே மாட்டார்களே...அதற்காகவாவது ஒரு பட்டம் இருந்தால் தேவலையல்லவா....என் துரதிருஷ்டத்தினால் எல்லாம் வேறாகிவிட்டது. இதோ பாரு; இக் கடிதத்தை" என்று கடிதத்தைக் காட்டினான்.

கடிதத்தைப் படித்த லோகு உண்மையில் வருந்தியது எதற்காகவெனில் நன்றாகப் படித்து பாஸ் செய்து வரும் மாணவனின் படிப்புக்குப் பங்கம் வந்துவிட்டதே என்றுதான். "மகாதேவா! இனிமேல் என்ன செய்வதாக உத்தேசம்?" என்றான்.

மகாதே:—உத்தேசமா! இம் மாதம் வரையில் படிக்கலாம். அடுத்த முதல் தேதியுடன் மூட்டையைக் கட்டிக்கொண்டு ஊருக்குப்போய் வேலைக்கு அலையவேண்டியதுதான். சாப்பாட்டிற்கும் இல்லாமல் லாட்டரியடிக்கவேண்டியதுதான். வேறு

என்ன செய்ய முடியும்? அந்த தர்மாத்மாவைப்போல் வேறு யார் உபகாரச் சம்பளம் இனிமேல் கொடுப்பார்கள்?

லோகு :—அந்த மகானுபாவன் உங்கள் பந்துவா!

தேவன் :—உம்...பந்துக்கள்தான் முதலே உதவி செய்ய மாட்டார்கள். செய்பவர்களைக் கண்டாலும் வயிறெரிவார்கள். அவருக்கும் எங்களுக்கும் ஜாதியில்கூட சொந்தமில்லை. அவர்கள் வேறு ஜாதி; நாங்கள் வேறு ஜாதி. என் தகப்பனும் அவரும் முன் பின்னறியாதவர்கள். ஒரு சமயம் அந்த பெரிய மனிதர் யாத்திரை செய்கையில் என் தகப்பனும் கூடச் சென்றிருந்தாராம்.

ஏதோ ஒரு ஊரில் காலரா அதிகமாகவிருந்ததாம். அதை யறியாமல் இருவரும் அவ்வூருக்குச் சென்றார்களாம். ஆனால் ஒருவரை யொருவர் அப்போதுமறியமாட்டார்களாம். அந்த மனிதருக்கு திடீரென்று காலரா கண்டுவிட்டதாம். அவருடன்கூட வந்த வேலைக்காரனும் பயந்துகொண்டு ஓடிவிட்டானும் அவ்வூரில் சிலர் அவரை ஊரில்கூட தங்கவிடாமல் ஊர்க்கோடியில் ஒரு மரத்தடியில் இழுத்து மனந்துணிந்து போட்டுவிட்டார்களாம்.

அம் மனிதர் தாகம் தாகம் என்று தவித்தாலும் தண்ணீர் ஊற்றுவார் இல்லையாம். இந்த விஷயத்தைக் கண்ட என் தகப்பனுருக்கு மனம் இளகிவிட்டதாம். "என்று பிறந்தோமோ அன்றே இறப்பதும் நிச்சயம். விதி இம்மாதிரி இருந்தால் இதைக் கடக்க யாரால் முடியும்? ஐயோ! பாவம். ஊரை விட்டு ஊர் வந்த மனிதனுக்கு திக்கில்லை என்றாலும் பொதுஜன ஆதரவுக்குமா பஞ்சம்.! நீங்களென்ன மனிதர்களாய்யா...என்னையும் அந்த காலரா கொண்டு போகட்டும்; நான் தண்ணீர் வார்க்கிறேன்."

என்று தைரியமாக அந்த மனிதனிடம் சென்றாராம். அவருக்கு ப்ரக்ஞையே இல்லையாம். வயிற்றுப் போக்கும் வாந்தியும் நிற்கவே இல்லை. எந்த கட்டை வண்டிக்காரனைக் கூப்பிட்டாலும் ஏற்றுவதற்கு பயந்தானும். உடனே என் தகப்பனுரே அந்த மனிதரைத் தோள்மீது தூக்கமாட்டாது தூக்கிக்கொண்டுபோய் அருகிலிருந்த

பாழும் சத்திரத்துத் திண்ணையில் கிடத்திவிட்டு வயலில் வேலை செய்யும் குடியானவர்களின் வீட்டில் நுழைந்து நன்றாகப் புளித்துக் காடியாயிருந்த சோற்றுத் தண்ணீரை பானையுடன் வாங்கி வந்து அதை விடாமல் அந்த மனிதனை பலாத்காரமாகக் குடிக்கச் செய்தாராம். இது பண்டைய காலத்து கைதேர்ந்த வைத்தியம்.

இக்காலத்தில் எடுத்ததற்கெல்லாம் ஊசி குத்துவதும், இல்லையேல், கத்தியால் அறுப்பதுந்தான் உயர்வாகி வருகிறது என் தகப்பனுருக்கு பழய கால வைத்திய முறையில் நம்பிக்கையுண்டு. புளித்த காடியை குவளை குவளையாகக் குடிக்கச் செய்ததோடு வத்த மிளகாயை நன்றாக மண் சட்டியில் கருக்கிவிட்டு அதில் ஜலத்தைக் கொட்டிக் காய்ச்சி கஷாயமாக்கி அதோடு சில மருந்துகளையும் சேர்த்துக் கொடுத்தாராம்.

அன்று இரவு பயங்கர இரவாகச் சென்று மறு தினமே அவருக்குச் சற்று தெளிந்ததாம் தெளிந்த பிறகே விஷயத்தை யறிந்து என் பிதாவின் இப் பேருதவிக்கும், உயிருக்குத் துணிந்து செய்த தீரத்திற்கும் மெச்சி அன்று வைத்த ப்ரீதி ஆழமாகப் பதிந்துவிட்டதாம். எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்த உத்தமனே என்று பல நாளும் சொல்லுவாராம்.

அதுமுதல் என் பிதாவிடம் அபாரமான மதிப்பும், ப்ரீதியும் வைத்து சகல விஷயத்திலும் உதவி செய்ததோடு என் பிதாவுக்கு ஒரு வேலையும் செய்துவைத்தாராம். என் பிதா சில வருடங்களுக்குப் பின் இறந்துவிட்டார். அப்போது அப் பெரியார் என் பிதா நோயில் கிடக்கும்போதே "உன் மகளைப்பற்றிக் கவலைப்படாதே; உன் ஆத்மா சாந்தியாகும்படி நான் என்னால் முடிந்தவரையில் காப்பாற்றுகிறேன். இஷ்டப்பட்டபடியே உன் மகள் B.A., M.A., என்ற பட்டம் பெறும்படிச் செய்கிறேன்" என்று கூறினாராம்.

அந்த விச்வாஸத்தை மறக்காது இதுபரியந்தம் நடத்திவிட்டார். திடீரென்று இறக்காதிருந்தால் இன்னும் ஏதாவது ஏற்பாடாவது செய்திருப்பார். என்னுடைய துரதிருஷ்டந்தான் அவர்

திடீரென்று போய்விட்டார். இனிமேல் என்ன செய்வது?' என்று கண்ணீர் விட்டான்.

இந்த விஷயத்தைக் கேட்ட லோகு தேவனின் பிதாவுடைய குணத்திற்கு வியந்தான். "தேவா! நீ ஒன்று செய்கிறாயா! அந்த பெரிய மனிதருடைய பிள்ளைகளில் ஒருவரில்லாவிட்டால் ஒருவருக்கு தகப்பனாரின் குணமும், தயாளமும் இருக்காமலா போய் விடும்? நீ நேரிலேயே சென்று உனக்கு எப்படியாவது உதவி செய்ய வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுப் பாரேன். முழுச்சம்பளமில்லா விட்டாலும் அரைச் சம்பளம் கொடுத்தாலும் மிச்சம். இன்னும் யாரையாவது கேட்கலாம் என்று தோன்றுகிறது" என்றான்.

அந்த யோசனையும் மகாதேவனுக்குப் பொருத்தமாகவே தோன்றியதால் அதற்கிசைந்தான், எனினும் அங்கு செல்வதற்கும் பணம் வேண்டுமே என்ன செய்வதென்று யோசித்துத் தியங்கினான். "பணத்திற்காகத் தியங்குகிறாயா! கடவுள் காப்பாற்றுவார். நீ என்னிடம் கொடுத்த புத்தகங்களை விற்றுவிட்டேன். அதில் 7 ரூபாய் வந்தது. இதோ இருக்கிறது. சென்று இரண்டில் ஒன்று தெரிந்துகொண்டு வந்துவிடு'' என்றான்.

இருவரும் பேசிக்கொண்டே ஹாஸ்டலை யடைந்தார்கள். மறு தினமே அப் பெரியாரின் ஊராகிய தமிழ் சிறந்து விளங்கிய சங்கப் புலவர்கள் வாழ்ந்த மதுரைமா நகரத்திற்குச் சென்றான். இவ் வேழை மாணவன் தன் காலேஜும், ஹாஸ்டலும், தன் தாயார் இருக்கும் க்ராமமும் தவிர வேறு எதுவுமே பார்த்ததில்லையாதலால் மதுரைமா நகரத்தைப் பார்த்ததும் அவனுடைய மனதிற்கு ஓர் தனித்த இன்பமும் உத்ஸாகமும் உண்டாகியது.

தான் ஊருக்குப் புதியதாகையால் யாரிடம் விசாரிப்பது, எங்கு செல்வது முதலிய ஒன்றுமே தெரியாமல் ஸ்டேஷனிலேயே சற்று ப்ரமித்தான். பிறகு அங்குள்ளோர்களை விசாரித்துக் கொண்டே அப் பெரியாரின் வீட்டிற்கு தெருத்தெருவாய் அலைந்து திரிந்து சென்றான். வெயிலும் ஏற ஏற தேவனுக்குக் களைப்பும் அதிகமாகிவிட்டது.

மீனாட்சியம்மனின் நான்கு கோபுரங்களும் வீதியில் செல்லும்போதே தரிசனமாகியதைக் கண்டு உள்ளம் பூரித்தவாறு "தாயே! உதவி கிடைக்கவேண்டுமே" என்று வேண்டிக்கொண்டே, பித்தன்போல் அவ் வீட்டு வாசலில் நின்றான். பெரிய மனிதர், அதிலும் வயது முதிர்ந்த பெரியார் மரணமாகையால் அளவற்ற ஜனங்கள் அவ் வீட்டிற்குப் போவதும் வருவதுமாக இருந்தார்கள். தேவனுக்கோ அவர்களை ஒருவருமே தெரியாது. எப்படிச் சென்று விசாரிப்பது பாவம்! வீதியிலுள்ள வேலைக்காரனை நோக்கி "ஐயா! வீட்டு எஜமானை எப்போது பார்க்கலாம்?" என்றான். அவன் இப்போது வேலையாயிருக்காரு. பகல் 2 மணிக்குதான் பார்க்கமுடியும்" என்றான்.

பகல் இரண்டு மணி வரையில் வீணாக வீதியில் காத்துக்கிடப்பானேன் என்று தோன்றியதால் கோயிலுக்காவது சென்று வரலாம் என்று எண்ணியவனாய் வழி விசாரித்துக் கொண்டே வைகையாற்றுக்குச் சென்று ஸ்நானம் செய்துவிட்டு கோயிலுக்குச் சென்றான். எந்த நேரமும் மீனாக்ஷி சன்னிதியில் கூட்டம் ஏராளமாக இருக்கும் அதோடு அன்று ஆடி வெள்ளிக்கிழமை கடைசீ கிழமையாதலால் புருஷர்களின் கூட்டத்தை விடப் பெண்களின் கூட்டமோ வெகு அதிகமாகக் காணப் பட்டது.

பெண்மணிகள், சிறு குழந்தை முதல் 70 வயது பாட்டிமார் வரையில் சுமங்கலிகளும், அமங்கலிகளும் கூட்டங்கூட்டமாகச் சாய்கிறார்கள். அனேகப் பெண்கள் கல்யாணம்போல் உயர்ந்த ஆடையாபரணங்களால் அலங்கரித்துக் கொண்டு கையில் தட்டு தட்டாக புஷ்பம் தாம்பூலம் முதலியன கொண்டு செல்லும் காட்சியோ ஓர் ஆநந்தமயமாயிருந்தது.

வேலவார்த்திகளை அழைத்துச் சென்று அம்பாள் தரிசனம் செய்விப்பதற் கென்றே காத்துக்கொண்டிருக்கும் சாஸ்திரிகள் வரும் மனிதர்கள் பணக்காரராயிருப்பின் வலிய எதிரே சென்று "வாருங்கள்: வாருங்கள். திவ்ய மங்களமுண்டாக வேண்டும். மீனாட்சி க்ருபையில் சகல பாக்யமும் கிடைக்கும்" என்று அஸ்து வாழ்த்துக்

கூறியபடியே தட்டுகளை வாங்கிக் கொண்டு கூட்டத்தை வழி விலக்கி உள்ளே அழைத்துச் செல்கிறார்கள்.

மகாதேவனைப்போல் ஏழையாக, பயித்தியக்காரன் போல் சென்றால் ஒரு கவலையுமில்லை யல்லவா? மீனாட்சியம்மன் கோயிலின் முன் பக்கமுள்ள வெகு மேன்மையான சித்திர வேலைப்பாடுகளையும் சிற்ப வேலைப்பாடுகளையும் கண்டு ப்ரமித்தபடியே "ஆகா! என்ன அருமையான வேலை! எந்த கை தேர்ந்த வேலைக்காரன் இம்மாதிரி செய்து நம் தாய் நாட்டின் கலைப் பெருமையை நிலை நாட்டினானோ?" என்று மகாதேவன் உள்ளம் பூரித்தது.

அவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டே சன்னிதானத்தின் உள்ளே த்வஜ ஸ்தம்பத்தினருகில் சென்றான். "அடாடா...அந்த அழகிய அற்புதமான கண் கொள்ளாக் காட்சியில் மகாதேவன் மெய்சிலிர்த்து ஆநந்தமும் பக்தியும் மேலிட்டுத் தம்பித்து நின்று விட்டான். த்வஜஸ்தம்பத்திற்குச் செல்லும் வழிவரையில் ப்ரம்மா நந்தமாக பெண்மணிகள் பக்தி ச்ரத்தையுடன் அம்மனுக்கு மாவு விளக்கு எற்றிவிட்டு அதன் பக்கத்திலேயே உட்கார்ந்து தோத் திரப் பாடல்களும், அம்பாள் மீது பாட்டுகளும் சிலர் உரக்கவும் சிலர் மெல்லவும் பாடிக்கொண்டிருக்கிறார்கள்.

தட்டுகளில் மாவுகள் பலவிதமாகக் கலந்து நான்கு மூலைக்குச் சிலர் திரியிட்டும், சிலர் நடுமத்தியில் மட்டும் திரி இட்டும், சிலர் சுற்றும் ரவுண்டாக பல திரிகளிட்டும் ஓரே ஜோதி மயமாக விளக்கு கள் எற்றி இருந்தார்கள். தேங்காய், பழம், வெத்திலை பாக்கு முத லியவைகள் இன்னொரு தட்டில் இருந்தன. கிண்ணத்தில் சிலர் நெய்யை வைத்துக் கொண்டு விளக்குகளுக்கு விட்டுக் கொண்டே இருந்தார்கள்.

அம்மா! மீனாக்ஷி!......தாயே!......மீனலோசனி! அம்பிகே! மரகதாங்கி......என்றெல்லாம் வாய் விட்டுச் சொல்லும் சப்தம் கும்மென்று சன்னிதியைச் சுற்றி ரீங்காரம் செய்வதுபோலிருந்தது. திருப்பதியில் மாவு விளக்கு எற்றி "கோவிந்தா! கோவிந்தா!" என்று கோவிந்தம் போடும் கூட்டமும், மயிர் கொடுத்து விட்டு மொட்டையுடனிருக்கும் கூட்டமும் அதொரு தினுசான பயத்தை யும், பக்தியையும் கொடுப்பதாயிருக்கும்.

இந்த காட்சியோடு அசல் கல்யாண வீட்டுப் பெண்களைப்போல் அலங்காரமும், தலையில் கமகமவென்று பரிமளம் வீசும் கதம்ப மலரும், ஜாதி மல்லிகை மலரும் ஒன்று கூடி வீசும் வாஸனையே மனத்திற்கு ஓர் ரமணீயமான சுகத்தைக் கொடுக்கிறதல்லவா? பெண்களின் கூட்டமும் அலங்காரமும் ஒரு அழகு. தீபத்தின் ஜோதிச் சுடரும் இளமையும் ஓர் ஆநந்தத்துடன் கூடிய பக்தியில் கலக்கிற உணர்ச்சி அவர்களின் பாடல்கள் கர்ணாம்ருதமும் மனத்தை யுருக்கிப் பரவசமுறச் செய்யும் தனிப் பெரும் சக்தி வாய்ந்த மகிமை.

இத்தனையுடன் "மீனாட்சி மேமுதந்தேஹி" "தேவி மீனாட்சி" மீனலோசனீ" "மதுராபுரவாசி" முதலிய கீர்த்தனங்களைப் பாடி மீனாம்பிகையின் அழகை வர்ணிக்கும்போதே அதே அம்பாளின் தரிசனாம்ருதம் கிடைத்துக் கொண்டிருக்கும் காட்சி ஆக எல்லாம் ஒன்று கூடி எத்தகைய நாஸ்திகனையும் ஆஸ்திகமாகச் செய்து விடும் என்பதில ஐயமே இல்லை.

ஆஸ்திக தர்மத்தையே அனுஷ்டிக்கும் மகாதேவனுக்குக் கூற வேண்டுமா! கண்களில் ஆநந்த தாரை பொழிகிறது. இந்த கண் கொள்ளாக் காட்சியாலும், திவ்யதேஜோன்மயமான அம்பாளின் தரிசனத்தினாலும், சாஸ்திரிகள் செய்யும் ராகத்துடன் கூடிய அர்ச்சனையின் இன்பத்தினாலும், மாவு விளக்குகளின் மகிமைச் சுடர் ஒளியினாலும் தன்னையே மறந்து விட்டான் என்று தாராளமாகக் கூறலாம்.

"தாயே! மீனாக்ஷி......தயை செய்வாய் என்தன் தாயே மீனாக்ஷி!" என்ற ஒரு பாடலை அடிக்கடி ஒரு பிச்சைக்காரன் பாடியதைக் கேட்டு அந்த ஒரு அடியை மட்டும் தேவன் சதா சொல்லிக் கொண்டிருப்பான். அங்கும் அதைத் தவிர வேறு என்ன தெரியும். கல்யாண வீடுகளில் கூட இத்தனை ஆநந்தமும் வைபவமும் ஒரே கூட்டமாகப் பெண்களும் இருக்க முடியாது. ஒவ்வொருவர் ஒவ்வொரு காரியமாக இருப்பார்கள். அன்றி ஒவ்வொரு தனிக் கூட்டமாக விருப்பார்கள். சிலர் சமயங்களுக்கு மட்டும் வந்து விட்டுப் போய்விடுவார்கள்.

ஆடிக் கடைசி வெள்ளிக்கிழமை கொண்டாட்டத்தில் கண்ணுக்கும், மனத்திற்கும், செவிக்கும், இதயத்திற்கும் ஏக காலத்தில் மீனாக்ஷியின் சன்னிதானத்தில் ஆநந்தத்தை யடையலாம் தான் வந்த காரியத்தையே மறந்தான். இந்த வைபவத்திலேயே மனம் லயித்து ஈடுபட்டுப்போய்விட்ட மகாதேவன் திரும்பிச் செல்வதையே நினைக்காமல் வெகு நேரம் இதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இம்மாதிரி விளக்கேத்துவது தெரிந்தால் தானும் செய்திருக்கலாமே என்று எண்ணி ஏங்கினான். 'நெய்யாவது வாங்கி விளக்குக்கு சேர்க்கலாம். பாலாவது வாங்கி அதோ எல்லோரும் சேர்க்கும் அபிஷேகக் குடத்தில் சேர்க்கலாம், என்று எண்ணி ஓட்டமாகச் சென்று நெய்யும் பாலும் வாங்குவதற்கு இரண்டு அலுமினிய பாத்திரங்கள் வாங்கி, அதில் பாலும் நெய்யும் வாங்கி வந்து பாலைக் குடத்தில் சேர்த்துவிட்டு, நெய்யை அங்கிருந்த ஒரு பாட்டியம்மாளின் கையில் கொடுத்து "பாட்டீ! இதையும் விளக்கில் சேர்த்து விடுங்கள்" என்றான்.

பாட்டியம்மாளும் சேர்த்துவிட்டு "சேவிடா அப்பா! சேவி. ஏதோ இந்த காலத்துப் பிள்ளையா யிருந்தாலும் கோவிலுன்னும் தெய்வபக்தின்னும் உனக்கிருக்கே, அதுவே போதும் எம்பேரனை கூப்பிட்டேன். கோவிலாம் குளமாம்; மாவிளக்குமாச்சு; எல்லாமாச்சுன்னுப் புட்டான். அவன் புத்தி யெப்படி?" என்று முணு முணுத்தபடியே பாட்டி விளக்குக்கு நெய் பூராவும் ஊற்றி விட்டாள்.

பிறகு அந்த ப்ரஸாதங்களில் கொஞ்சம் மகாதேவனுக்குக் கொடுத்தாள். மகாதேவனும் பக்தியோடு அதை வாங்கிக் கொண்டு பாட்டிக்கு நமஸ்காரம் செய்துவிட்டு விடைபெற்றுக் கொண்டான். அம்பாள் தரிசனம் செய்துப் பின்னர் கோயில் முற்றும் ப்ரதக்ஷணம் வந்து அங்குள்ள காக்ஷிகளை எல்லாம் கண்குளிரப் பார்த்தான். சிற்பிகளின் திறத்தால் செய்துள்ள கற்சிலைகளையும் தூண்களையும் கண்டானந்தித்தபடியே வந்தான்,

கோபுர வாசலில் புஷ்பக் கடைகளும், படக்கடைகளும், பக்ஷணக் கடைகளும் இன்னும் பலவித கடைகளையும் சுற்றிப் பார்த்தான். பிறகு ஓரிடத்திலுட்கார்ந்து பாட்டி கொடுத்த ப்ரஸாதத்தைச் சாப்பிட்டான். ஒரு மண்டபத்தில் படுத்து இளைப்பாறுகையில் அயர்ந்து தூங்கிவிட்டான். கண் விழித்துப் பார்க்கையில் மணி சரியாக மூன்றடித்துவிட்டது. உடனே அலறிக் கொண்டு ஓடினுன்.

அங்குள்ள காவல்காரன் "நீ மூன்று மணிக்கு வந்தால் ஐயாவைப் பார்க்க முடியுமா! என் ஒரு மணி தாமதம்? இனிமேல் இரவு 8 மணிக்குத் தான் பார்க்கலாம்" என்றுன். அதுவரையில் வீணுக உட்கார்ந்திருப்பானேன் என்று திருமலைநாயக்கன் மகால், மாரியம்மன் தெப்பக்குளம், தெப்பக் குளத்துக் குள்ளிருக்கும் பெரிய பங்களாவைப் போன்ற மண்டபம் அதனழகுகள் முதலியவற்றைப் பார்த்துவிட்டு திருமலை நாயக்கன் மகாலின் வேலைப்பாடுகளைப் பற்றி வியந்து கொண்டே 7 மணிக்கெல்லாம் அங்கு மீண்டும் வந்தான்.

அப்போது காவல்காரன் "இன்று என்னமோ ஐயா 6 மணிக்கே வந்து தன் தனி விடுதிக்குப் போய்விட்டார் நீ ஓடிப் போய் விட்டால் எப்படி? ஒரு மனிதரை அதிலும் பெரிய மனிதரை பார்க்க வேண்டுமென்றல் காத்துக்கிடந்தாலல்லவோ முடியும்? இனி மேல் நாளைக் காலைதான் போ.!" என்று தயை தாக்ஷிண்யமின்றிச் சொல்லிவிட்டான்.

என்ன செய்வான் பாவம்! "சாமி இடங்கொடுத்தாலும் பூசாரி இடம் கொடுக்கமாட்டான் என்பது போல் இந்த பெரிய மனிதர்கள் விஷயத்திலுமிருக்கிறதே. இந்த தேவதைக்கு ஏதாவது வாய்க்கரிசி போடவேண்டுமோ என்னமோ, அதனுல்தான் இப்படி இழுக்கடிக்கிறுனே என்னமோ! இன்று இரவே புறப்படலாமென்றல் அது முடியாதுபோ லிருக்கிறதே. என்ன செய்வது?" என்று யோசித்தான்.

உடனே ஒரு ரூபாயை எடுத்து அக்காவல்காரன் கையில் வைத்து மூடினுன். அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே காவல்காரன் "சாமி!.......இப்படி உட்காருங்க ஐயா! சாப்பாட்டுக்கு கீழே

வருவாறு; அப்போ சமயம் பாத்து உன்னை யனுப்புகிறேன்'' என்று வேஷம் போட்டு நடித்தான்.

பின்னும் 10 நிமிடத்திற் கெல்லாம் ' சாமி! உள்ளே போங்க. ஐயா கூடத்துலே இருக்கிறுரு'' என்றுன். இவன் இதுகாறும் செய்தது முற்றும் ஹம்பக்கென்பதைக் கூறவேண்டுமா? எல்லாம் அந்த ஒரு பில்லைக்குப் போட்ட தாளமாகும்

உடனே மகாதேவன் உள்ளே சென்றுன். நான்கு சகோதரர் களும் விசுப் பலகையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். தேவன் நால்வரையும் வணங்கிப் பின் தான் இன்னுனென்றதைக் கூறி பெரியவரின் மரணத்திற்கு வருந்தி, ''எஜமான்கள்! இந்த ஏழை யைக் கைவிடாமல் காப்பாற்றவேண்டும்'' என்றுன்.

இவன் கூறி முடிப்பதற்குள் 'ஓகோ!......உபகாரச் சம்பளப் பேர் வழியா!'' என்று நால்வரும் கூறினுர்கள். உடனே மூத்தவன் ஈவு இரக்கமின்றி பேசத் தொடங்கி ''போடா போ..... பைத்தியக் காரன் போல் கேட்க வந்துவிட்டெ! என் தகப்பன் சாகவேண்டு மென்று அப்போதே தலையில் எழுதி இருந்தால் அதை உன் தகப் பனுல் தடுத்துவிடமுடியுமா? உன் தகப்பன் என்ன கடவுளோ, அதெல்லாம் சுத்த மடத்தனம். என் தகப்பனுருக்கு இத்தனை நாள் உயிருடனிருந்து இத்தனை பணத்தையும் பாழும் தானம் தருமம், நன்றி, பன்றி என்று செலவு செய்யக் காத்திருக்கையில் அப்போ ஏன் செத்திருப்பார்?

மரியாதையாய்ப் போய்விடு. ஏதோ உன்னதிர்ஷ்டம் தான் இதுவரையில் அக்கிழம் உயிருடனிருந்தது. படித்தவர்களெல்லாம் பாறையைப் புரட்டிவிட்டார்கள். நீ தான் மிச்சமோ? போடா, பைத்தியக்காரா! இந்த காலத்திலே எங்கப்பாவைப் போல பயித்தி யம் இனிமேல் அகப்படாது. அங்கங்கே சோற்றுக்கே தாளமாக விருக்கிறது......உம்......போ''......என்று விரட்டி விட்டான்.

என்ன செய்வான் ஏழை மாணவன்! படிப்பின்மீதுள்ள ஆசைக்கயிறு அவனை இழுத்துக் கொண்டு வந்தும், உபயோகமற்று

விட்டதால் வேறு எங்கு செல்வது, என்ன செய்வது? மனம் உடைந்துபோய் விட்டது. இனிமேல் புத்தகங்களைத் தூக்கிக் கடலில் போட்டுவிட்டுப் போகவேண்டியது தான்.'' என்று நினைக்கும்போது கல்வியிலிருந்த அபார ஆர்வத்தின் முதிர்ச்சியினால் இதயமே வெடித்துவிடும் போலாகிவிட்டது. பித்தன்போல் இறங்கி வீதியில் வந்தான். அதே மதுரையம்பதியே இருண்டு, தலை சுழல்வது போல் தோன்றியது. கால் இழுத்துச் செல்லுமிடத்தில் நடக்கலானான்.

---

## 4—வது அதிகாரம்

### ப்ரேமை நதியில் த்யாகக் கப்பல்

வயது அதிகம் ஆகவில்லை எனினும் மனக் கவலையாலும், வேலையின் தொல்லையாலும் சங்கரியம்மாளின் தேகம் மெலிந்து, இளைத்துத் துரும்பு போலும், சுருக்கங்கள் விழுந்து கிழவிபோலும் காணப்பட்டது. அந்தம்மாள் அப்பளாத்து மாவை இடித்துக் கொண்டு வெயர்வை சொட்ட வேலை செய்து கொண்டிருந்தாள். இரண்டு பெண்மணிகள் வந்து "மாமி! இரண்டு இலைக்கட்டும், அப்பளாமும் வேணடும்.'' என்று கேட்டார்கள்.

உடனே சங்கரியம்மாள் எழுந்து கையை யலம்பிக் கொண்டு நன்றாக வட்டம் வட்டமாகத் தைத்திருக்கும் வெளேலென்று உலர்த்திய ஆலை இலைக்கட்டுகளையும், அப்பளக் கட்டையும் எடுத்துக் கொடுத்தாள். அவர்கள் கொடுத்த சில்லரையை வாங்கி பெட்டியில் போடப் போகையில் பெட்டியில் எத்தனை இருக்கிறதென்று எண்ணினாள். சரியாக நாலே முக்கால் ரூபாய் இருந்தது.'' இன்னும் இம்மாதம் பத்து நாட்கள் இருக்கிறதே. அந்த ஜகதீச்வரி இன்னும் இரண்டொரு ரூபாய்கள் கொடுக்கமாட்டாளா!'' என்று எண்ணினாள். பணத்தை எடுத்து இரண்டு மூன்று முறை பார்த்தாள்.

அந்தம்மாளின் முகத்தில் இன்பமும், துன்பமும், சோர்வும் மாறி மாறி உண்டாகியது. அவளுடைய தள்ளாமையின் மத்தியில் ஓர்வித இன்பமும் உண்டாயது. உடனே மீண்டும் அப்பள மாவை இடிக்க வாரம்பித்தாள். அப்போது சிறுமி யொருத்தி வந்து "மாமி! முட்டை பொறியும், அவலும் அரை படி அம்மா வாங்கி வரச் சொன்னுள்" என்றுள்.

உடனே சங்கரியம்மா அச்சிறுமிக்கு அதைக் கொடுத்துவிட்டு மீண்டும் இடிக்க உட்கார்ந்தாள். மாவு இடித்துக் கொண்டே இருக்கையில் மகாதேவன் "அம்மா!" வென்று கூவிக் கொண்டே, கண்ணில் நீர் ததும்ப வந்தான். தான் சற்றும் எதிர்பாராத விதமாய் தன் மகனின் குரலைக் கேட்டதும் சங்கரியம்மாள் ப்ரமிப்பும், ஆச்சரியமுமடைந்து அவன் தோற்றத்தைக் கண்டு திடுக்கிட்டும் எழுந்து வந்து 'ஏண்டாப்பா! தேவா......ஏது திடீரென்று வந்தோ?......உனக்கு என்ன உடம்பு? ஏன் ஏதோ ஒரு மாதிரி இருக்கே? என்ன சமாச்சாரம்?" என்று கேட்டாள்.

தேவன் தன் தாய் வெயர்க்க வெயர்க்க மாவு இடிப்பதைப் பார்த்ததும், பின்னும் தொண்டையை அடைத்துக் கொண்டது. என்னுடைய சுகத்திற்காகவும், கல்விக்காகவும், இந்த நிலைமையில் அப்பளாம் செய்தும், இலை தைத்தும், அவல் இடித்தும் பல விதத்தில் ச்ரமப் பட்டும் நமக்கு அதிர்ஷ்டம் ஒட்டவில்லையே!" என்று வருந்தியவாறு தாயைக் கட்டிக் கொண்டான்.

ஆகா! அந்த அன்னையின் அன்பிற்கு ஈடு இணை உலகில் வேறு ஏதாவது உண்டா! அந்த புத்திர வாத்ஸல்யத்திற்கும் இணை வேறு உண்டா? இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று ப்ரதி பலனைக கருதாது, தானகவே மழையைப் போன்று சுறக்கும் அன்பல்லவா! தாயும் மகனும் அப்படியே சில விநாடிகள் தம்பித்தார்கள்.

பிறகு மகாதேவன் சாவதானமாக நடந்த விஷயங்களை எல்லாம் தாயிடம் கூறி விசனித்தான். தான் எத்தனையோ அரும்பாடு பட்டு எதிர்பார்த்ததெல்லாம் வீணுகி விட்டதே என்று சங்கரியம்மாளுக்கும் விசனம் தாங்கமுடியவில்லை. "எல்லாம் கடவுளின் சோதனையப்பா! சோதனை! இதுகாறுமாவது உனக்குக் கண் திறக்கச்

செய்தார்களே அதுவே போதும். இனிமேல் பரம ஏழைகளாகிய நாம் உயர்ந்த படிப்பை எப்படி முடிக்க முடியும்? இவ்வளவு தான் நமக்கு ப்ராப்தம். எங்காவது திரிந்து அலைந்து வேலைக்கு ப்ரயத்தனப் படுவதை விட்டு புலம்பிப் பயன் என்ன? அதிர்ஷ்டமிருந்தால் எந்த விதத்திலும் கடவுள் கஞ்சி வார்ப்பார். நம் தொழிலைச் செய்து, கிடைத்ததைக் கொண்டு ஜீவிப்பது இனி நாம் செய்யவேண்டியது. வீணாக விசனிக்காதே. தைரியமாயிரு அப்பா!'...என்று தன் விசனத்தையும் அடக்கிக் கொண்டு, தன் மகனைத் தேற்றினாள். இதல்லவோ தாயின் தனிச்சுடர் அன்பு! இதயத்தைத் துளாவிய இணையற்ற இன்ப ஊற்று.

தாயின் தேறுதல் மொழிகளில் சிறிது ஆறுதல் பெற்ற மகாதேவன் தாயின் மடியிலேயே தலையை வைத்துக்கொண்டு படுத்தான். சங்கரியம்மாள் மகாதேவனின் தலையைத் தடவியபடியே உட்கார்ந்திருந்தாள். இருவருக்கும் என்ன பேசுவது என்று தோன்றவில்லையாதலால் மௌனமே குடிகொண்டது.

மகாதேவன் மனங் கலங்கி வெறி பிடித்தது போல் மெல்ல எதையோ யோசித்தபடியே வெளியில் சென்றான். எப்படியாவது இன்னும் ஒரு ஆசை தன் மாமனைக் கேட்டுப் பார்த்துவிடலாம். உதவி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் தெரிந்து கொண்டு போய்விடுவது என்ற ஆவல் மகாதேவனின் மனத்தில் எழும்பியது. அதைத் தன் தாயிடம் தெரிவித்தால் அவள் இசைவாளோ மாட்டாளோ என்று யோசித்து தனக்குள்ளே தெரிவிக்கவேண்டாமென்ற முடிவிற்கு வந்துவிட்டான்.

அன்று மாலை தான் முன்பு சொல்லியதுபோல் ராவ்பகதூர் ராமலிங்கத்தின் வீட்டில் தேனீர் விருந்து அமர்க்களப்படுகிறது. மகாதேவன் அந்த தெரு வழியில் வரமுடியாது, மோட்டார்கள் பும் பும் என்று வந்துகொண்டே இரு சாரிகளையும் தோரணம்போல் அலங்கரித்துவிட்டன. இங்கு என்ன தடபுடல் என்று முதலில் தெரியாத மகாதேவனுக்கு அனுசூயாவுக்குத்தான் விவாகமோ என்று எண்ணினான். மனம் திடுக்கிட்டது. தன்னுடைய துரதிருஷ்டம் கண் முன்பு தோன்றுவதுபோல் எண்ணினான்

அங்கிருந்த ஒருவரை விசாரித்த பிறகே தேனீர் விருந்து என்பதையறிந்தான். இருட்டுவதற்கு முன்பு அங்கு வந்தால் எப்படியும் யாராவது தன்னைப் பார்த்துவிடுவார்கள் அதோடு இந்த சமயத்தில் நாம் அங்கு செல்வதும் சரி இல்லை. ஆகையால் தூரவிருந்து பார்ப்போம். யாரையாவது வழியனுப்ப அனுசூயா வெளியில் வரமாட்டாளா! அப்போது அவளையாவது கண்குளிரப் பார்ப்போம்' என்ற யோசனையுடன் சற்று தூரத்திலேயே உலாவினான்.

இன்னும் கொஞ்ச நேரம் சென்றதும் அனுசூயாவின் இனிமையான கானம்ருதம் வீதியில் உலாவும் மகாதேவனின் செவியில் விழுந்த உடனே அவனை யறியாமல் அவன் கால்கள் அவனை நாம் முன்பு தெரிவித்ததுபோல் இழுத்துக் கொண்டு வந்துவிட்டன. கும்பலில் எட்டி எட்டிப் பார்த்தும் தனது உயிரினும் இனிய முகம் தோற்றவில்லை.

அனுசூயாவின் பாடல்கள் அவன் உள்ளத்தைத் தளாவி அன்பு வெள்ளமாகச் சுறந்து ஓடுகிறது. "என்னை யழைக்காவிட்டால் என்ன மோசம். இந்த கூட்டத்தில் நாம் போவதை மாமா பார்க்கப் போகிறாரா? அப்படி பார்த்தாலும் இத்தனை பேர்களின் முன்பாக கோபித்துக் கொள்ளப் போகிறாரா? அவ்வளவு அநாகரிகமாக நடக்கமாட்டார்" என்றெல்லாம் எண்ணி இருக்கிறானேயன்றி கால் மட்டும் கேட்டைக் கடக்க முடியவில்லை.

மனத்தோடு இந்த போராட்டம் முடிவதற்குள் பாட்டும் நின்று விட்டது. உள்ளிருந்து பலர் எழுந்து வருவதை யறிந்ததும் தானாக விலகிக் கொண்டு முன் போலப் போய்விட்டான். மீண்டும் பும் பும் என்று கார்கள் இரைச்சலுடன் பறக்க வாரம்பித்தன. சீமான்களும் சீமாட்டிகளும் ஏறிச் செல்கிறார்கள்.

விருந்துக்குக் காரணபூதரா யிருந்த பட்டதாரியும், அவர் மனைவி மக்களும் கையில் பூமாலையைத் தாங்கி வந்தார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து ராமலிங்கம் தம்பதிகளும், அனுசூயாவும் வழியனுப்ப வந்தார்கள். வண்டியில் ஏறிய பிறகும் அனுசூயாவின் இனிமையான பாடலைப் பற்றி ச்லாக்கியமாகப் பேசிவிட்டுச் சென்றார்கள்.

அப்போது தூர நிற்கும் தேவன் தன்னருமைக் காதலியைக் கண்குளிரப் பார்த்துப் பரமாநந்தங் கொண்டான். அவளையே தான் பார்ப்பதால் என்ன நினைப்பார்களோ என்கிற பயங்கூடத் தோன்றாமல் பார்த்துக் கொண்டே நின்றான்.

அவர்களின் கார் சென்றதும் தற்செயலாக அனுசூயா வீதியை நோக்கும் போது மகாதேவனைப் பார்த்ததும் கூறத்திறமற்ற ஆச்சரியத்தினால் தேகம் சிலிர்த்து, கண்கள் மலர்ந்து, ஓர் நூதனமான இன்ப உணர்ச்சியால் தாக்கப்பட்டு சில விநாடிகள் நின்றாள். அடுத்த நிமிடமே தாயார் உள்ளே போவதை யறிந்ததால் தலைகுனிந்த படியே தாயைப் பின்பற்றினாள்.

தான் சற்று முன்பு பாடிய "ஆசை முகம் மறந்து போச்சே" என்ற பாடலும்; அதற்கு முன்பு தான் தேவனைப் பற்றி நினைத்ததும் உடனே அவன் தரிசனம் கிடைத்ததும், ஏதோ கனவின் தோற்

றம்போலிருந்தது. அவள் மனது தன் வசமின்றி கட்டு மீறிய வேதனையில் தவிக்கின்றது. ஆனால் அத்தனை கூட்டங்களுக்கு முன்பு தன் மாறுதல்கள் தெரியாதபடி வெகு சாமர்த்தியமாய் நடந்து கொண்டு, விருந்துக்கு வந்தவர்களை எல்லாம் அனுப்பிவிட்டு வீதியில் வந்து பார்த்தாள்.

நிலவு வெளிச்சத்தில் ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. மகாதேவன் அப்போதும் அந்த பக்கம் கோடியிலேயே பித்தன்போல் நின்று கொண்டிருந்தான் அனுசூயா வீதியில் வந்து நிற்பதையறிந்து அளவிலா சந்தோஷத்துடன் வேகமாக இக்கேட்டுப் பக்கம் வந்தான். தாங்கமுடியாத ஆவலும் ஆநந்தமும் பொங்கிய குரலில் 'தேவா!...எப்போது வந்தீர்கள்?'' என்று கேட்டுவிட்டாள்.

அங்ஙனம் கேட்ட அடுத்த க்ஷணமே இது வீதி என்றும், தன்னை தன் பெற்றோர்கள் பார்த்துவிடப் போகிறார்களே என்ற அச்சமும், பயமும், திகிலும் உண்டாகிவிட்டன. நாற்புறமும் சுற்றிப் பார்த்தாள். தன் தாயார் அலங்காரங்களைக் களையச் சென்றது ஞாபகத்திற்கு வந்தது. அவள் கேட்ட அதே சமயம் தேவன் பூரித்த மனத்துடன் "அனுசூயா! ...சவுக்யமா''!.......என்றான்.

ஒரு இமை கொட்டும் நேரங்கூட இல்லை. ஒருவரை யொருவர் விழுங்கி விடுபவர் போல் கண்கள் சுழன்றன. வாய் பேச முடியவில்லை. "அனுசூயா! அனுசூயா'' வென்று ராமலிங்கம் கூப்பிடும் குரல கேட்டவுடனே "மகாதேவ்! போய் வருகிறேன்'' என்று கூறி மான்போல் துள்ளி மறைந்துவிட்டாள். அதற்குள் ராமலிங்கம் எதிரில் வந்து "என்னம்மா வீதியில் இராக்காலத்தில் தனித்து நிற்கிறாய்?'' என்று கேட்டார்.

குயில் போன்ற குரலால் "இல்லையப்பா! கடைசியாகச் சென்ற கமலவேணியின் காலாழி கழன்று விழுந்துவிட்டது. அதை அவள் தேடிக்கொண்டிருக்கும்போது நான் உள்ளே வந்துவிடலாமா? அதனால் நானும் கூடவிருந்து தேடிக் கொடுத்தனுப்பிவிட்டு வருகையில் நீங்களும் கூப்பிட்டீர்கள்'' என்று வெகு ஆழமான அந்தரங்கத்தை மறைத்து காலாழியில் முடித்துவிட்டாள்.

மகாதேவன் காதிலும் மணியோசையைப் போல் இந்த வார்த்தைகள் ஒலித்தன. அதற்கு மேல் அங்கு நிற்பது சரியல்லவென்று எண்ணி வீட்டிற்குப் போய்விட்டான். அதிர்ஷ்டந்தான் இவனை அலக்ஷியம் செய்துத் தள்ளுகிறதென்றால் தினம்ஸ்வீகரித்துக் குலாவும் நித்திரா தேவியும் அன்று அவனை வெறுத்துத் தள்ளிவிட்டாள். என்ன தான் செய்வான்?

அநுசூயாவை மட்டும் சித்திராதேவி ஆதரித்தாளா! அதுவுமில்லை ஏதேதோ எண்ணுததும் எண்ணிப் புரண்டு புரண்டு இரவை யோட்டினள். மறு தினம் ஒரு பந்துவின் வீட்டு சஷ்டியப்தபூர்த்தி கல்யாணத்திற்குச் செல்லவேண்டி இருந்ததால் எல்லோரும் அதிகாலையிலேயே எழுந்து அலங்காரத்துடனும், சஷ்டிபூர்த்தி தம்பதிகளுக்கு வரிசையுடனும் கல்யாண வீட்டிற்குச் சென்றார்கள்.

இதை யறியாத மகாதேவன் காலை 8 மணிக்கு இங்கு வந்து விசாரிக்கையில், 'மூன்று மணிக்கு வந்தால் எஜமானைப் பார்க்கலாம்' என்று வேலைக்காரன் மூலம் தெரிந்துகொண்டு சென்றுவிட்டான். சஷ்டிபூர்த்திக்குச் சென்றவர்கள் திரும்புவதற்குள் எண்ணத்தில் நினையாதபடி விபத்தொன்று நேர்ந்துவிட்டது.

எந்த கல்யாண வீட்டிலும் பெரியவர்களும் சரி, பசங்களும் சரி வாழைப்பழத்தை டஜன் கணக்கில் உரித்துத் தம் தொப்பையை நிரப்புகிறவர்கள் தோலை குப்பையில் போடுவது கிடையாது. எந்த இடத்தில் உரித்துத் தின்றார்களோ அதே இடத்தில் போட்டுவிட வேண்டியது. மழமழப்பான தரையில் வழவழப்பான தோல் சறுக்கி விழுந்து எத்தனை பெயர்களுக்கு கால் ஒடிந்தும், பலத்த அடி பட்டும் அங்கமே ஊனமாகி விடுகிறது தெரியுமா! இந்த அல்ப காரியத்தில் தான் அஜாக்ரதை. இந்த சிறிய அஜாக்ரதையினால் தான் பெரிய விபத்துக்கள். அவ்விபத்தினால் உருப்படாது போய் விடுவதும் உண்டு.

கல்யாணத்திற்கு வந்திருந்தவர்கள் வாழைப்பழத்தைத் தின்றுவிட்டுத் தோலைப் போட்டுவிட்டதை யறியாது அநுசூயா வேகமாக நடக்கையில் அத்தோல் வழ வழப்பான தரையில் பலமாக சறுக்கி, தடாரென்று விழுந்து விட்டாள் அந்த இடத்தில் போட்டிருந்த சலவைக்கல் மேஜையின் கூர்மையான நுனி, விழுந்த வேகத்தில் அநுசூயாவின் தலையில் பலமாகத் தாக்கிப் பிளந்து விட்டதால் ரத்த ப்ரவாகம் எடுத்துக் கொண்டு கட கடவென்று மழைபோல் ரத்தம் பெருகுகிறது.

இதைப் பார்த்து எல்லோரும் ப்ரமித்து விட்டார்கள். சிலருக்கு இந்த விபரீதமான ரத்தத்தைப் பார்த்து மயக்கமும் போட்டு விட்டது. ஸ்ரீமதி குப்பம்மாளுக்குத் தான் முதலில் மயக்கம் போட்டு விட்டது. அருகிலிருந்த தைரியசாலிகள் சிலர் கூக்குரலிட்டதில் ஆண் பெண் எல்லோரும் கூட்டமாகக் கூடி விட்டார்கள்.

அநுசூயாவைத் தூக்கிக் கிடத்தியும் ரத்தம் நின்றபாடில்லை. ராமலிங்கத்திற்கு குலை நடுங்கி விட்டது, வயிறு பதறுகிறது. உடனே அநுசூயாவைத் தூக்கிக் காரில் விட்டு தம் வீட்டிற்குக் கொண்டுபோய் வீதிப்பக்க முள்ள ரூமில் டாக்டர்கள் வந்து குழுமி விட்டார்கள். ஒரு சிறு வாழைப்பழத் தோலினால் உயிருக்கே அபாயம் வந்து விட்டது சிலருக்கு ஆச்சரியத்திலும் ஆச்சரியமாயிருந்தது.

தடையின்றி வரும் ரத்தத்தை நிறுத்துவதற்கு டாக்டரும் வெகு ச்ரமப்பட்டும் சாத்யமில்லாது போய் கடைசியில் சற்று நிதானப் பட்டது. அளவுக்கு மிஞ்சிய ரத்தம் ஏக காலத்தில் வெளியாகி விட்டதால் ஞாபகமே அற்று சவம்போலாகி விட்ட அநுசூயாவைப் பார்க்கப் பார்க்க பெற்றோர்களின் சப்த நாடியும் அடங்கிவிட்டது. வயிற்றில் சங்கடம் தாங்கமுடிய வில்லை எப்படியாவது எங்கள் வயிறு குளிர்ந்தால் போதும்; எங்கள் வயிற்றில் பாலை வார்த்தால் போதும். ஆயிரமாயிரமாய் பணத்தைச் செலவிட நான் தயாராக விருக்கிறேன். டாக்டர்! குழந்தை பிழைப்பாளா?'' என்று பரிதாபகரமாகக் கதறுகிறார்கள்.

அநுசூயாவுக்கு நாடி அடியோடு விழுந்து விட்டது. இதயமும் அடங்கிக் கொண்டே வர வாரம்பித்து விட்டது. எத்தனையோ ஊசிகள் குத்தினார்கள். எத்தனையோ மருந்துகளை ப்ரயோகித்தும் ப்ரதானமான ரத்த மெல்லாம் போய் விட்டதால் எந்த மருந்தும் வேலை செய்யவில்லை. டாக்டரின் முகம் தொங்கிவிட்டது என்ன செய்வார் பாவம்!

டாக்டர்:—மிஸ்டர் ராமலிங்கம்! ......கடவுளின் திருவுள்ளம் எப்படி இருக்குமோ சொல்ல முடியாது. என்னால் கூடிய வரையில் பார்த்து விட்டேன். இனி ஒரே ஒரு வழி இருக்கிறது. அதையும் செய்து பார்த்து விடுவோம். அதாவது, இந்த பெண்ணின் உடம்பு வலுவுக்குத் தகுந்தபடி பிறருடைய ரத்தத்தை ஓரளவு ஏற்றினால் ஒருகால் மருந்துகள் அந்த ரத்தத்தில் கலந்து வேலை செய்ய வாரம்பிக்கலாம். அதைத் தவிர வேறு வழியே இல்லை....

ராமலி:—ஐயா! எத்தனை படி வேண்டுமானாலும் இதோ என் சரீரத்திலிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்—என்று கையை நீட்டினார்.

டாக்டர்:—உமக்கு வயது ஆகிவிட்டதால் அந்த ரத்தம் ஒட்டாது. உமது மனைவிக்கோ ஆஸ்த்மா வியாதி இருப்பதால் ப்ரயோஜனமில்லை. உமது மகனோ இப்போது தான் டைபாயிடு ஜுரத்தில் கிடந்து பிழைத்தவன், சரியான ரத்தமே இருக்காது. இவைகளை எல்லாம் நான் அறியாமலா அப்போது முதல் யோசனை செய்கிறேன்......


அநுசூயாவைத் தனக்கு விவாகம் செய்துகொடுக்க மிகவும் ப்ரியப்படும் ரகஸியத்தை யறிந்துகொண்ட மைனர் ஜமீந்தார் அன்று தேக்கச்சேரியிலிருந்து வீட்டிற்குச் சென்றதும் தான் எப்படியாவது தனது சில முக்யமான சூழல்களை மறைத்து அநுசூயாவை மணந்துகொண்டு, அருணாசலத்தையும் கைக்குள் போட்டுக்கொண்டு ராமலிங்கத்தின் பணத்தை உரிஞ்சிவிடவேண்டும் என்று தீர்மானித்துவிட்டார்.

மறு தினம் அநுசூயாவுக்கு நேர்ந்த விபத்தைக் கேட்டு அவளைப் பார்ப்பதற்கு ராமலிங்கத்தின் வீட்டிற்கு அந்த சமயத்தில், வந்தார். தடபுடலாக விசாரித்து "இதென்ன அனியாயம் சார்! இத்தனை விபரீத விபத்து ஒரு சிறு வாழைப்பழத் தோலால் விளைந்ததைக் கேட்டு மனம் பதறிவிட்டது சார்!" என்றார். ராமலிங்கம் தம்பதிகளுக்கு இந்த வார்த்தை பரம சந்தோஷத்தையளித்தது.

டாக்டர் இவ்விதம் சொல்லும்போதும் மைனர் கல்லுப்பிள்ளையார்போல் அசையாமலும், ரத்தத்தைக் கொடுக்க சம்மதமற்றும் உட்கார்ந்திருந்தார். உண்மையில் இதயத்திலிருந்து அன்பு சுறந்தாலல்லவோ அவர் வாய் திறக்கும்! பணத்தினல் பணத்தை வெல்ல எண்ணு । தந்திர புத்தியில் த்யாக புத்தி எங்ஙனம் உதயமாகும்? அதே தருணத்தில் பதைக்கப்பதைக்க மகாதேவன் அங்கு ஓடி வந்தான். அனுசூயாவின் படுக்கையைப் பார்த்து மனம் சகியாது சங்கடம் செய்கிறது. கண்ணில் நீர் முட்டுகிறது. இவ்வறையில் வரும்போதே வைத்தியர் சொல்லியதைக் கேட்டுக் கொண்டே வந்தானகையால் பதை பதைத்தவாறு "டாக்டர்! டாக்டர்!...... இதோ! என் சரீரத்திலுள்ள அத்தனை ரத்தத்தை வேண்டுமாயினும் நான் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். அனுசூயா பிழைத்து என் மாமன், மாமியின் வயிறு குளிர்ந்தால் போதும். இதோ எடுத்துக்கொள்ளுங்கள். டாக்டர்! இன்றுவரையில் நான் எந்தவிதமான சீக்கும் அனுபவித்தது கிடையாது. கடவுளருளால் ஆரோக்யமாகவே இருக்கிறேன். தாமதம் வேண்டாம்....எடுங்கள்...ஏற்றுங்கள்" என்று பட படத்துக் கூறி கையை நீட்டினன். ராமலிங்கம் தம்பதிகளுக்கு இது ஆச்சரியமாகவும், சந்தோஷமாகவுமே இருந்ததால் "டாக்டர்! இவன் அன்னியன் கூட அல்ல. எங்கள் எட்டுப் பொட்டு ரத்தத்தில் ஒரு பொட்டு சம்மந்தப் பட்டவன். ஆகையால் நீங்கள் தியங்காமல் அந்த முறையையும் செய்து பார்த்து விடுங்கள். கடவுள் தான் இவனை சமயத்திற்கு இங்கு கொண்டு வந்தார். அப்பா! மகாதேவா! உன் தாராள மனமே எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று தடபுடலாகக் கூறினர்கள்.

டாக்டர் மகாதேவனின் தேகத்தை தன் குழலால் சோதித்துப் பின்னர் முறைப்படி மகாதேவன் கையிலிருந்து ஊசியின் உதவியால் ரப்பர் குழாயின் மூலம் அனுசூயாவின் கையில் ரத்தத்தை ஏற்றவாரம்பித்தார். மகாதேவனின் மனத்திலுள்ள கூறத் திறமற்ற உணர்ச்சிக்கு முன்பு இந்த ஊசி குத்தி ரத்தத்தை இழுக்கும் வலி கூடத் தெரியவில்லை. தான் உதவி கோர வந்த விடத்தில் தனது உதவி தன் காதலிக்குக் கிடைக்கும்படியாகக் கடவுள்

செய்ததானது அவனுக்கு அபாரமான சந்தோஷத்தையும், மகத்தான காரியத்தைச் சாதித்து விட்ட பெருமையையும் கொடுத்தது.



டாக்டர் வேண்டிய அளவு அனுசூயாவின் உடம்பில் ஏற்றிய பிறகு குழாயையும் ஊசியையும் எடுத்துவிட்டார். மகாதேவனுக்கும் மருந்து தடவிக் கட்டி விட்டார். "ஐயா! கடவுள் கருணை பாலித்துக் காப்பதாயிருந்தால் இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் நாடியும், இத

யமும் வேலை செய்யவாரம்பிக்கும்; இல்லையேல் அவ்வளவுதான். நீங்கள் கண்ணீர் விடாது தைரியமாய்க் கடவுளை வேண்டிக் கொண்டிருங்கள்'' என்று டாக்டர் கூறினர்.

குப்பம்மாளுக்கு நாகரிகம் தலை தூக்கித் தாண்டவமாடிய போதிலும் பழய கர்னாடக வழக்கமும் நம்பிக்கையும் மட்டும் விட வில்லை. 'நேற்று பார்டியில் அத்தனை அழகாகப் பாடியதால் யாரோ கண் வைத்து விட்டார்கள். திருஷ்டிதான் பட்டு விட்டது' என்று சொல்லிக் கொண்டே புறக்கடைச் சாமிக்கு பொங்கலிட அரிசியைச் சுற்றி வைத்தாள். சில மந்திரவாதிகளைக் கூப்பிட்டு மந்திரிக்கச் சொன்னாள். தேங்காய், கல்யாணப்பூசணிக்காய் முதலியன சுற்றி உடைத்தாள். ஏதேதோ ப்ரார்த்தனைகளை எல்லாம் செய்து கொண்டாள். மஞ்சள் துணியில் காணிக்கை முடிந்து கையில் கட்டினாள்.

ராமலி:—மகாதேவா! நாளைக்கு உன்னைப் பார்க்கிறேன். நீ சென்று வா. இங்கு கும்புகூடக் கூடாது

மகா:—இல்லை மாமா! நான் ஒன்றுமே பேசாமல் தூரவிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். சந்தடியே செய்யவில்லை.

அருணாசலம் மகாதேவனை வெளியில் அழைத்துச் சென்று ''மகாதேவா! இங்கு அயலார் இருப்பது தெரிந்தால் இன்னும் எல் லோரும் கூட்டம் போடுவார்கள். ஆகையால் வீட்டுக்குப் போய் நாளைக்கு வா. அப்பா, அம்மா ஏற்கெனவே கவலைக் கடலில் மூழ்கி விட்டார்கள். இன்னும் யாராவது வந்தால் தலைக்கொரு வார்த் தைகள் கூறி அவர்களைக் கலக்கி விடுவார்கள்'' என்று நைஸாகக் கூறினன்.

மகாதேவன் மனத்தில் சுருக்கென்று தைத்தது. ''ரத்தத்தைக் கொடுக்கு முன்பு நான் அயலாரல்ல; ரத்த சம்மந்தம் கலப்புடைய வன் என்று தகப்பனர் கூறினர்; அதே மனிதனை அயலார் என்று மகன் கூறுகிறன். உம்; யாவும் காலவித்யாசம் அந்த மைனர் இருக்

கலாம்; நான் இருக்கலாகாதா! எது எப்படியாது இருக்கட்டும் என் கண்மணி பிழைத்துக்கொண்டால் போதும். என் காதலியின் உயிருக்காக நான் பாடுபட்டேனே யன்றி இவர்களுக்காகவல்ல. என்னென்ன நடக்கிறதோ பார்ப்போம்...எல்லாம் ஈசனின் அருள்' என்று மனந்தேறியவனுய் வெளியில் வந்துவிட்டான்.

ஆனால் மனமோ இருக்கை கொள்ளவில்லை. 'ஒரு மணி காலத்தில் வேலை செய்தால்தான் பிழைப்பாள் என்று வைத்தியர் கூறிவிட்டாரே, அதுவரையிலாவது இருந்து பார்த்துக்கொள்ள முடியாமல் தைரியமாய் அனுப்பிவிட்டார்களே!' என்று விசனம் பொங்குகிறது வீட்டிற்கு வந்தான். இருக்கை கொள்ளவில்லை."எந்த நிமிடம் என்ன சமாச்சாரம் காதில் விழுமோ...எந்த நிமிஷம் எப்படி இருக்குமோ?" என்று தத்தளித்தவாறு பித்தன்போல் திரிந்தான்.

மீண்டும் மனங் கேளாமல் மாமன் வீட்டிற்கே ஓடினன். வீதி கேட்டிலிருக்கும் காவல்காரனை யார் வந்தாலும் உள்ளே விடக்கூடாதென்று திட்டம் செய்திருப்பதால் "உள்ளே விடவே முடியாது" என்று கண்டிப்பாய் கூறிவிட்டான். "உள்ளே விடாவிட்டால் போகிறது; உடம்பு எப்படி இருக்கிறது? அதையாவது சொல்லேன்" என்று கெஞ்சிக் கேட்டான்.

"அதுவும் தெரியாது; எல்லோரும் கண்ணீர்விட்டுக் கலங்குகையில் நான் அங்கு எப்படிச் சென்று விசாரிப்பது? ஆகையால் அது எனக்குத் தெரியாது. இருக்கும் ரீதியைப் பார்த்தால் பயமாகத்தான் தோன்றுகிறது." என்றான். இந்த வார்த்தை வெந்த புண்ணில் வென்னீரை ஊற்றுவதுபோல் தோன்றியது. வேலைக்காரனிடம் காலைப் பிடிக்காத விதம் கெஞ்சி "அப்பா! உனக்கு ஒரு ரூபாய் தருகிறேன். நான் வந்திருப்பதே அவர்களுக்குத் தெரியவேண்டாம். காம்பவுண்டு சுவருக்குள் போய் ஜன்னல் வழியாகப் பார்த்துவிட்டு ஓடிப்போய் விடுகிறேன். சற்று தயவு செய்து என்னை மட்டும் விட்டு விடு" என்று மன்றாடினன்.

வேலை :—உன் ஒரு ரூபாயினால் எனது வேலையே போய்விடப் பார்க்கிறாயோ! அதெல்லாம் முடியாது போய்யா! போ"...என்று நிர்த்தாக்ஷிண்யமாகக் கூறிவிட்டதால் மகாதேவனின் மனம் வெறுத்துப்போய்விட்டது. அப்போது இரவு 9 மணிக்குமேல் இருக்கும். மீண்டும் வீட்டிற்கு வந்தான்.

சங்கடம் செய்யும் மனத்தை அவனால் சமாதானம் செய்யச் சாத்யமின்றி பரண்டு தவித்தான். 'அநுசூயாவின் உயிர் இருக்கிறதோ, இல்லையோ! இத்தனை நேரம் என்ன கதியாயிருக்கிறாளோ?' வென்று நினைக்கும்போதெல்லாம் ஆதிமுதல் தாங்களிருவரும் விளையாடிக் களித்த ஒவ்வொன்றும் நினைவிற்கு வந்துவிட்டது.

இரவு சுமார் ஒரு மணி சமயமிருக்கும். "திரும்பவும் போய் பார்ப்போம். உயிர் இருப்பதும் இல்லாததும் தெரிந்துபோய்விடும்" என்று மறுபடியும் பங்களா வாசலுக்கு வந்தான். கேட்டு பூட்டப்பட்டிருந்தது. கேட்டுக்கு உள்புறம் தோட்டத்திற்கு அப்பாலுள்ள கட்டிடத்தின் உள் நடக்கும் விஷயம் இவனுக்கு எப்படி தெரிந்துகொள்ள முடியும்? மனப் பதகளம் வேகத்தினால் பின்னால் விளையப்போகும் விபத்தையும் மறந்து கேட்டின்மீது ஏறி குதித்து உள்ளே ஜன்னல் வழியாகப் பார்த்துவிட்டு வருவதென்று எண்ணி, அப்படியும் இப்படியும் பார்த்துவிட்டு கேட்டுமேல் ஏறினான்.

183010

அதே சமயம் இராக்கால ரோந்துக்காக வரும் இரு கான்ஸ்டேபில்கள் அவனைக் கள்ளனென்று எண்ணி "டேய்! டேய்!" என்று கூவிக்கொண்டே, அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு குமு குமு வென்று முதுகில் குத்தி விட்டார்கள். அந்தோ! பாவம்! அன்பின் வேகத்தால் இழுக்கப் பட்டுச் செய்ய எண்ணிய செய்கையின் பலன் இவ்விதமாகவா சுழல் காற்றுபோல் சுற்றி இழுக்க வேண்டும்? திக்ப்ரமை பிடித்து இடிந்துபோய் மிரள மிரள விழித்தபடியே குத்துக்கல்லாய் நின்றுவிட்டான்.

PRINTED AT TATA PRESS & PUBLISHED BY
V. M. PARTHASARATHY, MADRAS.

## ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல்கள்.

| 30 ரூபாய்க்கு 39 நாவல்கள். | முழு விலை | | 'ஜகன்மோகினி' சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை. | |
|---|---|---|---|---|
| | ரூ. | அ. | ரூ. | அ. |
| வைதேகி (2 பாகங்கள்) | 2 | 8 | 2 | 0 |
| ராதாமணி | 2 | 8 | 2 | 0 |
| சாருலோசனா | 2 | 8 | 2 | 0 |
| பத்மசுந்தரன் | 2 | 8 | 2 | 0 |
| காதலின் கனி | 2 | 8 | 2 | 0 |
| நவநீதகிருஷ்ணன் | 2 | 0 | 1 | 12 |
| ருக்மிணீகாந்தன் | 2 | 0 | 1 | 12 |
| சாமளநாதன் | 2 | 0 | 1 | 12 |
| தியாகக்கொடி | 2 | 0 | 1 | 12 |
| மங்களபாரதி | 2 | 0 | 1 | 12 |
| சண்பகவிஜயம் | 1 | 12 | 1 | 8 |
| கௌரீமுகுந்தன் | 1 | 12 | 1 | 8 |
| ஸாரமதி | 1 | 12 | 1 | 8 |
| சோதனையின் கொடுமை | 1 | 8 | 1 | 4 |
| பரிமளகேசவன் | 1 | 4 | 1 | 0 |
| உத்தமசீலன் | 1 | 4 | 1 | 0 |
| இன்பஜோதி | 1 | 4 | 1 | 0 |
| ராஜமோஹன் | 1 | 4 | 1 | 0 |
| அனாதைப் பெண் | 1 | 4 | 1 | 0 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 0 | 0 | 14 |
| சாந்தகுமாரி | 1 | 0 | 0 | 14 |
| மாயப்ரபஞ்சம் | 1 | 0 | 0 | 14 |
| கதம்பமாலை | 1 | 0 | 0 | 14 |
| கோபாலரத்னம் | 0 | 14 | 0 | 12 |
| புத்தியே புதையல் | 0 | 14 | 0 | 12 |
| பட்டமோ பட்டம் | 0 | 10 | 0 | 8 |
| நளினசேகரன் | 0 | 8 | 0 | 6 |
| வீரவஸந்தா | 0 | 8 | 0 | 6 |
| மூன்று வைரங்கள் | 0 | 8 | 0 | 6 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 | 0 | 6 |
| பிச்சைக்காரக் குடும்பம் | 0 | 8 | 0 | 6 |
| ஆனந்தஸாகர் | 0 | 8 | 0 | 6 |
| ப்ரேமப்ரபா | 0 | 8 | 0 | 6 |
| பக்ஷமாலிகா | 0 | 6 | | |
| ஜயஸஞ்சீவி | 0 | 4 | | |
| சுகுணபூஷணம் | 0 | 4 | | |
| அம்ருததாரா | 0 | 4 | | |
| அன்பின் சிகரம் | 0 | 4 | | |
| ஸரஸராஜன் | 0 | 4 | | |

முன்பணமனுப்பி
தபாற் செலவின்றி
பெற்றுக் கொள்ளுங்கள்.
வி. பி. கிடையாது.

"ஜகன்மோகினி" ஆபீஸ், 26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி.

Jaganmohini Vol. XIV—No 9 Regd. No. M. 2210.



தலை வலிக்கு

Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்

இருதயக் கோளாறுகளையும்

விலக்குங்கள்




அம்ருதாஞ்சனை

உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்

சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,

சென்னை கல்கத்தா பம்பாய்